
இதழ் 202

# மண்

ஜேர்மனி / 2020
ஆடி - ஆவணி / July - August



உலகமெல்லாம் கொரோனா நுண்ணுயிர் பேரழிவு 2019 - 2020



- மண் சஞ்சிகையின் அஞ்சலிகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியினால் கொரோனா வைரஸ் நிவாரணப் பணிகளுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 2020 ஏப்ரல் - மே மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட மனிதநேய உதவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி


MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

## சரிவுப் பாதையில் வடக்கு, கிழக்கு கல்வித் தரம்...

கடந்த பதினைந்து வருட கால க.பொ.த (சா.த) பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்ற உண்மை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியிருந்தன. பல கல்லூரிகளின் மாணவர்களின் சிறப்பான முடிவுகள் சமூகவெளியில் பாராட்டப்பட்டன. ஆனால்கடந்த 15 வருட கால முடிவுகளை ஆராய்ந்த போது பல நுண்ணிய சரிவுகளை தெளிவாக அவதானிக்க முடிந்தது. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு உள்ளிட்ட இலங்கையின் வடக்கு,கிழக்கு மாவட்டங்களின் அடைவு மட்டங்கள் சரிந்து பட்டியலின் கடைசி நிலைகளை அடைந்துள்ளன. சில மாவட்டங்களில் கடந்த 15 வருடமாக இது எப்படி நடந்துள்ளது என்பதை 5 வருட இடைவெளியில் கீழே நாம் காணலாம்.

2015இல் கொழும்பு-1ம்இடம்,வவுனியா- 19ம்இடம், மாத்தறை- 2ம்இடம், யாழ்ப்பாணம்-21 ம் இடம், அம்பாந்தோட்டை-3ம்இடம், மட்டக்களப்பு-18, திருகோணமலை- 23, முல்லைதீவு- 24, கிளிநொச்சி- 25, 2019 இல் கொழும்பு- 3ம்இடம், வவுனியா- 21ம் இடம்,மாத்தறை- 2ம்இடம், யாழ்ப்பாணம்-19ம்இடம், அம்பாந்தோட்டை-1ம் இடம், மட்டக்களப்பு-18, திருகோணமலை-23, முல்லைதீவு-24,கிளிநொச்சி- 25

இங்கே கல்வியில் தென்பகுதி மாவட்டங்கள் முன்னேறி விட்டன என்பது அல்ல பிரச்சினை. இலங்கையின் எல்லாப் பகுதிகளும் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதே அவசியம்.அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களால் முடிந்த விடயங்கள் ஏன் வடபகுதி மாவட்டங்களால் முடியவில்லை என்பதுதான் சிந்தனைக்குரியதாகும். போர்க்காலச் சூழல் கடந்து எல்லோருக்கும் சமவாய்ப்புகள் இருக்கும் இன்றைய நிலையில் தென்பகுதி மாணவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கும் போது வடக்கு, கிழக்கு மாணவர்கள் அப்படியே இருக்கின்றனர்.

கற்றலில் வடக்கு, கிழக்கு மாணவர்களின் அடைவுகள் சரிந்து கொண்டிருக்கின்றன.ஆக, இந்த நிலை இன்னும் தொடருமாயின், நாளடைவில் அரச-தனியார் வேலைவாய்ப்புகளில் வடக்கு, கிழக்குப் பகுதியினரின் எண்ணிக்கைகள் சரிய, தென்பகுதியினர் படிப்படியாக அந்த இடைவெளிகளை நிரப்ப ஆரம்பிப்பார்கள். அது தவிர்க்க முடியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல, பணபலமுள்ள ஒருசிலர், சுயமுயற்சியாளர்கள் என திறன் மிக்க சிலர் வாழ்க்கையில் முன்னேறினாலும் வேலைவாய்ப்பின்றி பல வடக்கு, கிழக்கு இளைஞர்கள் பின்தங்கி நிற்பர். இவை இன்று கண்ணுக்குத் தெரியாது. ஆனால் எதிர்காலத்தில் தெரியும். அப்போது வடக்கு, கிழக்கு சமுதாயம் மேலும் பின்தங்கி நிற்கும்.

இந்த நிலைக்குக் காரணங்களாக பின்வருவன இருக்கக் கூடும்.

1) பெற்றோர்களின் கண்காணிப்புக் குறைபாடுகள், கண்டிப்பு குறைபாடுகள், குறைவான அழுத்தம்.

2) கல்வி மீதான விருப்பு பொதுவாக குறைந்து பிற விடயங்கள் மீதான ஆர்வம். அளவுக்கு மீறிய வசதிகளும் இதில் அடங்கும்.

3) கல்விதான் அழியாத ஒரே ஒரு சொத்து என்ற போர்க் காலத்தில் இருந்த நம்பிக்கை இன்று இல்லாமல் போனமை.

4) கல்வித்துறையில் இருக்கும் குறைபாடுகள்.

5) சக மாணவர்களையும் ஊக்கப்படுத்தி முன்னேற்றி விடுவதில் முன்னிலை மாணவர்களின் அக்கறை குறைந்தமை.

இவை தவிர போரின் வடுக்கள் உள்ளிட்ட இன்னும் ஏராளமான வேறு பல காரணிகளும் இருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாக விபரித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றிக்கான தீர்வுகளை காண்பது அவசியம்.

ஏராளமான ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளை பெற வேண்டும் என்பதற்காக அன்றாடம் போராடுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனால் இன்றைய நடைமுறைச் சட்டங்கள், பெற்றோரின் அழுத்தங்களால், பல ஆசிரியர்கள் கண்டிப்புடன் செயற்பட முடியாமை ஒரு காரணியாக இருக்கலாம்.

ஆனால் ஒவ்வொரு காரணியும் மிக முக்கியமானது. இந்த சரிவை இனியும் வடக்கு, கிழக்கு கல்விச் சமூகம் உணர்ந்து கொள்ளவில்லை என்றால் போர் காலத்தில் கூட கல்வித் துறையில் சாதனைகளுடன் திகழ்ந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் வசதிகள் வந்ததால் அழிந்து போனதாகவே வரலாறு எழுதும். இந்தச் சரிவில் சமூகத்தில் உள்ள அத்தனை பேருக்கும் முக்கிய பங்கு உண்டு. ஒருவரை ஒருவர் குற்றம் சொல்ல முடியாது.

இனி என்ன செய்ய வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி கட்டுப்பாடுகளுடன், பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை களகல்வியியலாளர்கள், பெற்றோர், மாணவர்கள், புலம்பெயர்ந்தோர் சிந்திக்க வேண்டும். அதுவே இன்றைய சமூகம் எதிர்கால சந்ததிக்கு ஆற்றுகின்ற பெரும் நன்மை ஆகும்.

-ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## மோகத்தை முனி...

அழகான ஒரு பொருளைக் கண்டதும் உனக்கென்ன எண்ணம் தோன்றுகின்றது?. அதை உன்னுடையதாக்கிக் கொண்டு மகிழவேண்டுமென்று ஆசைப்படுகிறாய். எப்படியாவது அதை வாங்கிவிடுகிறாய். வீட்டில் கொண்டுவந்து வைத்து ஆனந்தப்படுகிறாய் அப்பொருள் காணாமல் போனாலே உடைந்து பாழாய்ப்போனாலோ உனக்குத் தாங்கமுடியாத வருத்தமும் வேதனையும் அழுகையும் ஏற்படுகின்றது. ஏன்.. அப்பொருள்மீது நீ வைத்த ஆசை, பற்று. ஒரு பொருளின் மீது அதிக ஆசையும் பாசமும் கொள்ளாதே. ஆசையையும் பாசத்தையும் அகற்றிவிடு. நிச்சயமில்லாத அழியக்கூடிய பொருள்கள் மீது அதிக ஆசை வைக்கக்கூடாது என்கிறார் ஔவைப்பாட்டி. மோகம் என்றால் வெறுத்து ஒதுக்கு என்று பொருள்.

## வல்லமை பேசேல்...

என்னால் ஆகாதது எதுவுமில்லை என்று அகம்பாவமாகச் சிலர் பேசுவார்கள். வானத்தை வில்லாக வளைப்பதாகவும் மணலைக் கயிறாகத் திரிக்கமுடியுமென்றும் விறாப்புப் பேசுபவர்காளால் எதுவும் செய்யமுடியாது. செய்யவும் மாட்டார்கள். இவர்கள் பேச்சை யாரும் நம்பவும் மாட்டார்கள். பாரதியார் கூறுகிறாரே அந்த வாய்ச்சொல் வீரர்கள் இவர்கள். நேர்மையானவர்கள் திறமைசாலிகள் இப்படி எல்லாம் தங்கள் வல்லமை பற்றிப் பெருமை பேசித் தம்பட்டம் அடிக்கமாட்டார்கள். உங்களிடம் திறமை இருக்குமானால் அதைச் செயலில் காட்டவேண்டும். அப்போதுதான் பிறர் உங்கள் பேச்சைக் கேட்பார்கள். உங்கள் திறமையைப்பற்றி நீங்களே தம்பட்டம் அடித்துக்கொள்ளாதீர்கள் என்பதையே தமிழ் மூதாட்டி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குண்டாம்..... (மூதுரை) (தொடர்ச்சி)

எழுதியவாறே காண், இரங்கும் மடநெஞ்சே..
கருதியவாறு ஆமோ கருமம்!..-கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை..

நமக்கு அது கிடைக்கவில்லையே.. இது கிடைக்கவில்லையே என்று ஏங்காதே. எல்லாம் கொடுத்து வைத்தபடிதான் கிடைக்கும். விரும்புகிறபடி எதுவும் நடப்பதில்லை. அவரவர் விதிப்படியே நடக்கும்.

கல்பிளவோடு ஒப்பர் கயவர் கருஞ்சினத்துப்
பொன்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே -வில்பிடித்து
நீர்கிழிய எய்த வடுபோண மாறுமே
சீர்ஒழுகு சான்றோர் சினம்.

சீலம் நிறைந்த பெரியோர்கள் இருக்கிறார்களே அவர்களுக்குக் கோபம் வருகிறது. கோபம் என்ன செய்யும் வந்த சில நிமிடத்தில் அடங்கிவிடும். அது போல நீரிலே அம்பு எய்தால் அந்த வடு எப்படி உடனே அழியுமோ அப்படியே. சிநேகிதர்களுக்குள் சண்டை வந்தால் உயர் குணமுடையோர் அதை உடனே மறந்து மீண்டும் கூடுவர். இரண்டாம் தரமானவர் யாராவது கூட்டிவைத்தால் கூடுவர். கடையரோ ஒரு நாளும் கூடார்.

நல்தாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்..

நல்ல தாமரை மலர்ந்த பொய்கையைத் தேடிச் செல்லும் அன்னப்பறவை. அதுபோல படித்த அறிஞர்களைத் தேடிச் செல்வர் அறிஞர். காக்கை என்ன செய்யும்!.. பிணத்தைத் தேடிச்செல்லும் எதற்கு!.. கொத்தித் தின்னுவதற்கு, அதேபோல கல்வி அறிவில்லாத மூர்க்கரை மூர்க்கரே தேடிச்செல்வர். கற்றவருடன் கற்றவரும், மூடருடன் மூடருமே நட்புக்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள்......

தாயின் மடியில் குழந்தையாய் நான் அறிந்து கற்ற முதல்மொழி தமிழ்மொழி. ஆமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் உயர்ந்த நீதிநூல்கள் பல உள்ளன. அத்தகைய நீதி நூல்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது திருக்குறள். அத்திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் ஒரு சிறந்த புலவர். திருவள்ளுவர் இந்தியாவிலே தமிழ்நாட்டில் பிறந்தார்.

திருக்குறளில் ஆயிரத்து முந்நூற்றி முப்பது (1330) பாடல்கள் உள்ளன. அறம், பொருள், இன்பம் என்ற முப்பால்களை இந்நூல் கொண்டுள்ளது. இது உண்மைக் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றது. மொழி, இனம், சமயம் ஆகிய வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் படித்து வாழ்க்கையில் முன்னேறுவதற்கு திருக்குறள் வழிகாட்டுகின்றது. இந்நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதனால் திருக்குறள் உலகப்பொது நீதிநூல் எனப் புகழ் பெறுகின்றது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்பது முதற் குறளாகும். நாம் பேசும்போதும், எழுதும்போதும் திருக்குறள்ப் பாடல்களைச் சான்றாகப் பயன்படுத்துவது சிறப்பாகும். எந்த உயிர்களையும் கொல்லாதிருத்தல், பொய் சொல்லாதிருத்தல் ஆகிய இரண்டு அறங்களையும் திருவள்ளுவர் மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றார்.

திருவள்ளுவரைத் தெய்வப்புலவர், பொய்யாமொழிப்புலவர் எனப்பலவாறு போற்றுகின்றோம். திருவள்ளுவர் தந்த சிறப்புமிக்க திருக்குறளை எல்லோரும் கற்போம் கற்றவழி வாழ்வோம்!..

## படிப்பது எதற்காக?....

நண்பர் ஒருவர் ஆபிரகாம் லிங்கனிடம் "படிப்பதால் பணம் கொட்டப் போவதில்லை" பின் ஏன் நீங்கள் எப்போதும் ஏதாவது படித்துக்கொண்டிருக்கிறீர்களே என்று கேட்டார். அதற்கு லிங்கன் "நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை.. பணம் வரும்போது அதை வைத்து எப்படிப் பண்போடு வாழவேண்டும் என்பதை அறிந்து கொள்வதற்காகவே படித்துக்கொண்டிருக்கிறேன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீய குணங்கள்

ரவி தனது வீட்டில் நாய்க்குட்டி ஒன்றை மிகவும் செல்லமாக வளர்த்துவந்தான். அந்த நாய்க்குட்டி ஒரு காகத்துடன் மிகவும் நட்பாக இருந்தது. ஒருநாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது. இதைக்கண்ட நாய்க்குட்டி காகத்திடம் சென்று "என்ன காக்கையாரே ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாய் இருக்கின்றீர்?.. என்று கேட்டது. அதற்கு காகம் "மனிதர்கள் ஏனைய பறவைகளை அன்புடன் வளர்க்கிறார்கள். அவற்றைப் பாராட்டுகிறார்கள். ஆனால் என்னை வெறுத்து, கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்?.. என்று கேட்டது.

இதற்குக் காரணம் உங்கள் தீயகுணங்கள்தான். நீங்கள் இத்தீய குணங்களை விட்டுவிட்டால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள் என்று நாய்க்குட்டி சொன்னது. எங்களிடம் அப்படி என்ன தீய குணங்கள் உள்ளன?... "கடமை, சுத்தம் இவ்வாறு பல நல்ல குணங்களில் நாங்கள்தான் சிறந்தவர்கள்" என்று சொன்னது காகம். "பகிர்ந்து உண்ணும் பண்பைக் கற்றுத் தந்ததும் நாங்கள்தான்"என்று பெருமையோடு சொன்னது காகம்.

"ஆமாம் உண்மைதான்" என்று சொன்னது நாய்க்குட்டி. இவ்வாறு நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், ஏனைய பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே?..குயில் கூவும்போது அதன் இனிமையை ரசிக்கிறார்கள். மயில் ஆடும்போது அதை ரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்து பேசக்கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் எம் இனத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே!..ஏன்?..என்று மீண்டும் கேட்டது காகம்.

"ஏன் என்று நான் சொல்லுகிறேன் உங்களிடம் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தாலும் உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால்தான் மனிதர் உங்களை வெறுக்கிறார்கள்" என்று கூறியது நாய்க்குட்டி. அப்படி என்ன தீய குணங்கள்?..என்று கேட்டது காகம். திருடுதல், ஏமாற்றுதல், பறித்தல் என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் வெட்கித் தலைகுனிந்தது. ஆகவே மாணவர்கள் ஆகிய நாம் தீய குணங்களை விட்டு. நல்ல குணங்களோடு வாழக் கற்றுக்கொண்டால் நன்மையே உண்டாகும்!..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா....

கண்ணில் கருவிழிபோல்
என்னைக் காத்தாயே
உன் உயிரை வருத்தி
என்னை வளர்த்தாயே!..

பத்து மாதம் சுமந்து பெற்று
ஊருலகம் கற்றுத் தந்து
கண்ணாய் நான் இருக்க
நீ இருந்தாய் தாயே!..

செல்வன் மோ.மதுஜன்
திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை.

## முயற்சி...

அலை அலையாய் துன்பங்கள்
அடுத்து அடுத்து வந்தாலும்
மலைபோல உறுதியுடன்
மண்ணில் வாழப் பழகுவோம்!..

கடமைதனைக் கண்ணாய்க்
கருதி என்றும் உழைத்திட்டால்
காற்றைப் போல விரைவாக
கவலைகள் யாவும் மறைந்திடும்!..

முயற்சி என்றும் உயர்ச்சிதரும்
முன்னோர்சொன்ன மொழியிதுவோ
முயற்சிகொண்டு உழைத்திடுவோம்
முன்னேற்றத்தைப்பெற்றிடுவோம்!...

செல்வன் சீ. ஆஜித்குமார்
திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை.

## படித்து உயர்ந்திடுவோம்...

பள்ளி நாமும் சென்றிடுவோம்
பாடம் நன்கு கற்றிடுவோம்
பணிவாய்ப் பேசப் பழகிடுவோம்
படித்தேஅறிவைப் பெருக்கிடுவோம்!..

அப்பா அம்மா சொற்கேட்போம்
அறிவிற் சிறந்தோர் வழிநடப்போம்
ஒன்று சேர்ந்து யாவருமே
உள்ளம் மகிழப் பேசிடுவோம்!...

விடுகதைகள் பல போட்டிடுவோம்
விடைகள் காண முயன்றிடுவோம்
என்றும் இனிய நட்போடு
இனிதாய்ப்படித்து உயர்ந்திடுவோம்!..

நலமாய் வாழக் கற்றிடுவோம்
நன்கு கற்றுத் தேறிடுவோம்
நல்ல பிள்ளைகள் நாம் எனவே
நாடு போற்ற வாழ்ந்திடுவோம்!..

செல்வன் தே.லோசன்
திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த உயிர் எனதல்ல....

"என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை" என்றான் ஒரு அரசன், ஞானியிடம். "உன் கடமையை நீ சரியாக செய்கிறாயா.?' என்று ஞானி கேட்டார். என் நாட்டிற்கு அன்னியர் பகை இல்லை. கள்வர் பயம் இல்லை. அதிக வரிகள் விதிப்பதில்லை. முறையாக நீதி செலுத்தப்படுகிறது. நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள். ஆனால் என் மனத்தில் மட்டும் அமைதி இல்லை. இந்த அரச பதவியில் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை' என்றான். '

அப்படியானால் ஒன்று செய். "உன் நாட்டை என்னிடம் கொடுத்து விடு" என்றார் ஞானி. "எடுத்துக் கொள்ளுங்கள்"என்றான் மன்னன். "நீ என்ன செய்வாய்" என்றார் ஞானி. "நான் எங்காவது போய் ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்கிறேன்" என்றான் அரசன். 'எங்கோ போய் தெரியாத வேலையை செய்வதை விட என்னிடமே வேலை செய். உனக்கு தெரிந்தது நாட்டை ஆட்சி செய்வது. அதையே செய். என் பிரதிநிதியாக மட்டும் நீ நாட்டை ஆண்டு வா. நான் பிறகு வந்து கணக்கு, வழக்குகளை பார்க்கிறேன்.' என்றார்.

சரி என்றான் மன்னன். ஒரு ஆண்டு கழிந்த பின் ஞானி அரசனை காண வந்தார். அரசன் இப்போது மகிழ்ச்சியாக காணப்பட்டான். அவரை வரவேற்று உபசரித்தவன் நாட்டின் கணக்கு வழக்குகளை எல்லாம் எடுத்து நீட்டினான். ''அது கிடக்கட்டும்" என்ற ஞானி "நீ இப்போது எப்படி இருக்கிறாய்" என்று கேட்டார். "நிம்மதியாக சந்தோஷமாக இருக்கிறேன்" 'முன்பு நீ செய்த பணிகளுக்கும், இப்போது செய்த பணிகளுக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா.....???' 'இல்லை' 'அப்போது ஏன் மன அழுத்தத்துடன் இருந்தாய்.....??? இப்போது எப்படி நிம்மதியாக இருக்கிறாய்.......???' விழித்தான் அரசன்.

ஞானி சொன்னார். "அப்போது நீ இது என்னுடையது என்று எண்ணினாய். இப்போது இது எனதில்லை. நான் இங்கு வெறும் பிரதிநிதி தான் என்று எண்ணுகிறாய்"" அந்த மனம் தான் அனைத்திற்கும் அடிப்படையே. நான் என்ற எண்ணம் வரும் போது அத்தனை துயரங்களும் உன்னை சூழ்ந்து கொண்டு விடும். இந்த உலகம் எனதல்ல. இந்த உடல் எனதல்ல. எனக்கு அளிக்கப்பட்டது. இந்த உயிர் எனதல்ல. எனக்கு கொடுக்கப்பட்டது .. என்று உணர்ந்தால் துன்பங்கள் அத்தனையும் ஓடிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நட்பை வளர்த்துக் கொள்ள சில வழிகள்...



1. பிறர் சொல்லும் கருத்துக்களை காது கொடுத்துக் கேட்கப் பழகிக் கொள்ளுங்கள்.
2. மற்றவர்களிடம் தேவையான கருத்துக்களை மட்டும் பகிர்ந்து கொள்ளுங்கள்.
3. நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்துப் பழகுங்கள்.
4. உங்கள் நண்பர்களை உற்சாகப்படுத்தும்படி பேசுங்கள். உற்சாகப்படுத்தும் செயல்களிலும் ஈடுபடுங்கள்.
5. பிறரின் நம்பிக்கைக்குரியவராக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள்.
6. நல்லவற்றையே தேர்ந்தெடுத்துப் பேசுங்கள்.
7. பிறரோடு பேசும்போது மற்றவர்களின் கண்களை நேராகப் பார்த்துப் பேசுங்கள்.
8. சிரித்த முகத்தோடு இருக்கப் பழகுங்கள்.
9. உங்கள் உரையாடலை மிகவும் சுருக்கமாக வைத்துக் கொள்ளுங்கள்.
10. உரையாடலைத் தொடங்கும்போது நீங்கள் சுற்றுச்சூழலை அடிப்படையாக வைத்துத் தொடங்குங்கள்.
11. நட்புணர்வோடு பழகியவர்களிடம் தொடர்ந்து நட்பை தக்கவைத்துக் கொள்ளுங்கள்.
12. உங்கள் நண்பரை மற்றநண்பர்களிடம் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அறிமுகப்படுத்துங்கள்.
13. நண்பர்களிடம் கலந்து பேசும்போது பொதுவான விசயங்களைப் பேசினால் பெரும்பாலும் பிரச்சனைகள் ஏற்படுவதில்லை என்பதை உணர்ந்து செயல்படுங்கள்.
14. மனம் திறந்து நண்பர்களோடு உரையாடுங்கள்.
15. உங்கள் நண்பருக்கு நல்ல நண்பராக இருக்கும்படி உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 20

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 5 | 2 | | | 9 |
| 3 | | | 6 | | 1 | | | |
| | | | | | | 4 | | 1 |
| | | 2 | 3 | 6 | | 1 | 5 | |
| | 5 | 3 | | | | | 2 | |
| | | 9 | 8 | | 5 | | | |
| | 8 | | | | | 3 | | |
| | | | | 7 | 6 | | | |
| | 2 | | | | 8 | 5 | 4 | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 113
## (ஆடி - ஆவணி - 2020)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 மாணவர்களுக்கு இது வந்தால் கொண்டாட்டம்தான்.

06-07 சில மாணவர் இது சொல்வதில் வல்லவர்கள்.

வ – இ:

08-07 இப்படியான வீடுகளும் உண்டு.

11- 10 புத்தகம் என்றும் சொல்லலாம்.

16-13 இனிப்பான தின்பண்டம்.

கீ – மே:

14- 10 உறுப்புக்களில் ஒன்று.

16- 08 உலகில் முதலானவள்.

மே – கீ:

01- 13 வட்டத்தின் அரைப் பங்கு.

03-07 சிலருக்கு இது விரைவாகவே வளர்ந்துவிடும்.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்குப்புதிர்..

**மாணவமணிகளே!..உங்கள் மூளைக்கு வேலை. கீழ் உள்ள கணக்கைச் செய்துபாருங்கள். முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் பதில் கிடைக்கும்...**

**கணக்கு -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | + | | - | 7 | =1 |
| + | 0 | + | 0 | - | 0 |
| | - | | + | 5 | =8 |
| - | 0 | - | 0 | + | 0 |
| | + | | - | | +1 |
| =2 | 0 | =4 | 0 | =8 | 0 |

**கணக்கு -2**

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | ☐ | 9 | − | 2 | ☐ | 9 | = | ☐ | 8 | ☐ |
| | + | | | | − | | | | + | |
| ☐ | 2 | ☐ | + | ☐ | 3 | 7 | = | 2 | ☐ | ☐ |
| 5 | ☐ | 8 | − | ☐ | 5 | ☐ | = | ☐ | 4 | 6 |

# இலங்கையில் G.C.E O/L பரீட்சை முடிவுகள்...

## 10,346 மாணவர்கள் 9 பாடங்களிலும் "ஏ" சித்தி

2020-04-27 வெளியாகியுள்ள க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவுகளின்படி 10,346 மாணவர்கள் 9 பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளனர் என பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 73.84% மாணவர்கள் கல்விப் பொது தராதர உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர். 66.82% மாணவர்கள் கணித பாடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இருப்பினும் வடகிழக்குப் பிரதேசங்களின் பரீட்சை முடிவுகளும் கல்வி வளர்ச்சியும் பின்தங்கியிருப்பதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சொற்களை அறிவோம்....

**மலேசியாவில் நடைபெற்ற தனித் தமிழியக்க மாநாட்டில் வெளியிடப்பட்ட கணனி நுட்பவியல் கலைச் சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| WhatsApp - | புலனம் | LED - | ஔிர்விமுனை |
| Youtube - | வலையொளி | 3D - | முத்திரட்சி |
| Instagram - | படவரி | 2D - | இருதிரட்சி |
| WeChat - | அளாவி | Projector - | ஔிவீச்சி |
| Messanger - | பற்றியம் | printer - | அச்சுப்பொறி |
| Twtter - | கீச்சகம் | scanner - | வருடி |
| Telegram - | தொலைவரி | smart phone – | திறன்பேசி |
| Skype - | காயலை | Simcard - | செறிவட்டை |
| Bluetooth - | ஊடலை | Charger - | மின்னூக்கி |
| WiFi - | அருகலை | Digital - | எண்மின் |
| Hotspot - | பகிரலை | Cyber - | மின்வெளி |
| Broadband - | ஆலலை | Router - | திசைவி |
| Online - | இயங்கலை | Selfie - | தம்படம் |
| Offline - | முடக்கலை | Thumbnail - | சுயஉரு-சுயப்பு |
| Thumbdrive - | விரலி | Meme - | சிறுபடம் |
| Hard disk - | வன்தட்டு | Print Screen - | போன்மி |
| GPS - | தடங்காட்டி | Inkjet - | திரைப் பிடிப்பு |
| cctv - | மறைகாணி | Laser - | மைவீச்சு |
| OCR - | எழுத்துணரி | | |

**நல்ல முயற்சி நாமும் மனனம் செய்வோம் . – தமிழுணர்வு கொண்டோர் இதை நண்பர்களுக்கும் பகிரலாம்....**

**செல்லாக்காசு......**

**செல்லும் கொடுத்து**
**செல்லமும் கொடுத்ததால்**
**செல்லம்மாவின் மகள்**
**செல்லாக்காசு ஆனாள்....**

**காத்திருப்பு......**

**ஆயிரம் உடலங்களை**
**ஒரே நாளில் புதைப்பதற்கு**
**காத்திருக்கும் ஆயிரம்**
**புதைகுழிகள்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உ" "ஊ" பழமொழிகள் சில...

-உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை
-உள்ளது போகாது இல்லது வாராது.
-உள்ளம் தீயெரிய உதடு பழஞ் சொரிய உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன்.
-உறவு போகாமல் கெட்டது கடன் கேட்காமல் கெட்டது. இதனை இப்படி கூட கூறுவார்கள்-பார்க்காத உறவும் கேட்காத கடனும் பாழ்
-ஊசியைக் காந்தம் இழக்கும் உத்தமனைச் சிநேகம் இழக்கும்.
-ஊணுக்கு முத்துவான் வேலைக்குப் பிந்துவான்.
-ஊண் அற்றபோது உடலற்றது.
-ஊமையாய் இருந்தால் செவிடும் உண்டு.
-ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு.
-ஊர் வாயை மூட உலைமுடி இல்லை.
-ஊழி பெயரினும் ஊக்கமது கைவிடல்.

## வாழ்க்கைத் தத்துவங்கள்...

அழிவைத் தருவது - ஆணவம்
ஆபத்தைத் தருவது - கோபம்
இருக்க வேண்டியது - பணிவு
இருக்கக் கூடாதது - பொறாமை
உயர்வுக்கு வழி - உழைப்பு
கண்கண்ட தெய்வம் - பெற்றோர்
செய்ய வேண்டியது - உதவி
செய்யக் கூடாதது - துரோகம்
நம்பக் கூடாதது - வதந்தி
நழுவி விடக்கூடாதது - வாய்ப்பு

-நம்முடன் வருவது-புண்ணியம்
-பிரியக் கூடாதது - நட்பு
-மறக்கக் கூடாதது - நன்றி
-மிக மிக நல்லநாள் - இன்று
-மிகப்பெரிய தேவை - அன்பு
-மிகக்கொடிய நோய் - பேராசை
-மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
-மிகப்பெரிய வெகுமதி-மன்னிப்பு
-விலக்க வேண்டியது-விவாதம்
-வந்தால் போகாதது - பழி
-போனால் வராதது - மானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்நெறியில்......

(நந்தகுமார்)

## நல்லொழுக்கங்கள்....

அன்பிலே வாழ் ஆனந்தம் பெறுவாய்.
ஆத்திரம் அறிவாற்றலை மறைக்கும்.
இனிது பேசி இன்பமாய் வாழ்.
ஈட்டிபோல் சொற்கள் இழக்கை ஏற்படுத்தும்.
உன் செயலே உன் விதி.
ஊக்கம் உயர்வைத்தரும்.
எண்ணும் எழுத்தும் ஏற்றம் உண்டாக்கும்.
ஏமாற்றாதே ஏமாறாதே.
ஐயம் நீக்கி அறிவு பெறுவாய்.
ஒரு முறை பேசுமுன் இரு முறை யோசி.
ஓடி விளையாடு குற்றம் செய்யாமல் கூடி விளையாடு.
முன்கூட்டியே மும்முறை யோசி முன்னேற்றம் அறிவாய்.
குனிந்தால் சுமப்பாய் நிமிர்ந்தால் உயர்வாய்.
முகமலர்ச்சி முன்நின்றால் முழுவதும் வெற்றியாகும்.
ஒன்றுபட்ட வாழ்வில் உண்டு நன்மை அதிகம்.
நிலையான அன்பில் சமாதானம் அமையும்.
மரம் நல்லதனால் அதன் கனியும் நல்லதாகும்.
மனம் கசப்பானால் வரும் வார்த்தைகள் கசப்பாகும்.
இரக்கம் இருக்குமானால் இல்லறம் சிறக்கும்.
புகழ்ந்து கூறலாம் எதையும் இகழ்ந்து கூறாதே.
நன்றி மறவாத வாழ்வு நம்மை அறியாமல் உயரும்.
பொறாமை பொல்லாத நோயைக்கொண்டு வரும்.
வார்த்தைகள் அசிங்கமானால் வாழ்க்கையும் அசிங்கமாகும்.
மன்னிப்பு ஒரு மகத்தான செயல்.

### பொன்மொழிகள்...

-பொறுமை உள்ள மனிதன் நிச்சயம் வெற்றி பெறுவான்.

-வெற்றிகளையும் தோல்விகளையும் சரிசமமாகப் பாவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

தெரிந்து செயல்வகை: –

461. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.

462. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

463. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

464. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

465. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

466. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

467. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

469. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

470. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மோடு
கொள்ளாத கொள்ளா துலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (வினைகளை ஆராய்ந்து செய்யும் திறன்)

461. ஒரு செயலைத் தொடங்கு முன் அழிவதையும் ஆவதையும் அதன்பின் உண்டாகும் ஆதாயத்தையும் ஆராய்ந்து செய்யவேண்டும்.

462. பழகிய இனத்துடன் தான் செய்யும் தொழில் பற்றி ஆய்ந்து தானும் எண்ணிப் பார்த்துச் செய்கின்றவருக்கு அரிய பொருள் எதுவும் இல்லை.

463. பின் கிடைக்கும் ஆதாயம் கருதிக் கையில் உள்ள முதலை இழந்துவிடும் செயலை அறிவுடையவர்கள் மேற்கொள்ள மாட்டார்கள்.

464. இழிவு தரும் குற்றத்திற்கு அஞ்சுபவர்கள் இனத்துடனும் தனித்தும் ஆராய்ந்து தெளிவில்லாத வினையைத் தொடங்கமாட்டார்கள்.

465. தான் செய்யும் செயலின் வகைகளை முழுதும் ஆராயாமல் செய்யத் தொடங்குதல் பகைவர் வளரும் நிலத்தில் பகைவரை நிலை பெறச்செய்யும்.

466. ஒருவன் செய்யக்கூடாத செயல்களைச் செய்வதனால் கெடுவான். செய்யவேண்டியதைச் செய்யாது விடுவதனாலும் கெடுவான்.

467. ஒரு செயலை எண்ணிப் பார்த்த பிறகே செய்யவேண்டும். செய்யத் துணிந்த பின் எண்ணிப்பார்க்கலாம் என்பது குற்றம்.

468. ஏற்ற வழியில் செய்யப்படாத ஓர் உபாயத்தைப் பலர் துணையுடன் செய்ய முயன்றாலும் அது குறையாகவிடும்.

469. அவரவர் குணங்களை அறிந்து செயற்படாவிட்டால் நன்மை செய்வதிலும் தவறு உண்டாகும்.

470. தன் தகுதிக்கு மீறிய செயல்களைச் செய்வதை உலகம் ஏற்காது. அதனால் உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களைச் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## முனைப்பு.....

காலைப்பனி கொக்கும் குருவியும் குளிரால் நடுங்கின. தங்களுக்குள்ளேயே பேசி அவை ஒரு முடிவுக்கு வந்தன. "இன்று நான் குளத்துக்குப் போவதில்லை...வேண்டுமானால் மீன் இங்கே வரட்டும்" என்றது கொக்கு. "நானும்தான் தோப்புக்குப் போவதில்லை... வேண்டுமானால் பழம் இங்கே வரட்டும்" என்றது குருவி. பொழுது கரைந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. நடுப்பகல் தாண்டிய பின்பும் பசியை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும். கொக்கு குளத்துக்குப் போனது. குருவி பழத்துக்குப் போனது. மரத்திலிருந்த அணில் பாடியது..

"கொக்கைத் தேடிக் குளம் வராது..குருவியைத் தேடிப் பழம் வராது"

## தோல்கள்....

பாம்பு தோலைக் கழற்றி வைத்துவிட்டுப் புறப்பட்டது. ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்த பக்கம் அது போனது. அங்கே நின்ற தனியன் ஆட்டிடம் "அதோ பார் பாம்பு உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகிறது நச்சுப் பாம்பு பல் பட்டாலே போதும்" என்று கூறியது சேவல். அப்படி ஒன்றும் நடந்துவிடாது...பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது... என்றது தனியன் ஆடு. சிறிது நேரத்தில்..ஆடுகளின் அலறல் புல்வெளியை உலுக்கியது. ஓசை வந்த திசை நோக்கி தனியன் ஆடும் சேவலும் ஓடின. அங்கே..பாவப்பட்ட அப்பாவி ஆடுகள் இரண்டும் பாம்புக்குப் பலியாகிச் செத்துக் கிடந்தன. சேவல் சொல்லியது..

"பல்லைக் கழற்றாத பாம்பு தோலைக்கழற்றி என்ன..வாலைக் கழற்றி என்ன"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-176
## (ஆடி- ஆவணி -2020)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-06 கொரோனா பரம்பலை இது செய்யாவிடின் மேலும் அதிகரிக்கும்.
09-11 சமையலறையில் பாவனைப் பொருள்.
16-18 மனிதருக்கு இது இருந்தால் கேடுதான் வரும்.
38-41 நாம் இதைச் சிக்கனமாகப் பாவிக்க வேண்டும்.
46-49 எழைகளின் வாழ்வு இதனில் என்றும் சொல்வார்கள்

**வ-இ**

07-06 வீட்டு மிருகம்.
14-12 இதுவும் ஒரு அரச துறையாகும்.
21-19 வீட்டில் ஒருவர்.
27-23 விளையாட்டுப் பொருள்.
35-22 இலக்கியத்தில் ஒருவர்.

**கீ.மே**

17-03 துணி வகைகளில் ஒன்று.
27-06 நமது பாரம்பரிய விழுமியங்களில் ஒன்று.
43-29 உலகம் எல்லாம் ஆட்டிப்படைக்கும் கிருமித்தாக்குதல்.
44-23 இலாபம் இதன் எதிர்ச்சொல்.

**மே-கீ**

01-22 தமிழர் பாராம்பரிய நடனங்களில் ஒன்று.
17-45 யாழ் குடாநாட்டில் ஒரு இடம் (ஊர்)
21-42 இனிப்பான தின்பண்டம்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதனால் எது கெடும்...

01) பாராத பயிரும் கெடும்.
02) பாசத்தினால் பிள்ளைகெடும்.
03) கேளாத கடனும் கெடும்.
04) கேட்கும்போது உறவு கெடும்.
05) தேடாத செல்வம் கெடும்.
06) தெகிட்டினால் விருந்துகெடும்.
07) ஓதாத கல்வி கெடும்.
08) ஒழுக்கமில்லாதவாழ்வுகெடும்.
09) சேராத உறவும் கெடும்.
10) சிற்றின்பன் பெயரும் கெடும்.
11) நாடாத நட்பும் கெடும்.
12) நயமில்லா சொல்லும் கெடும்.
13) கண்டிக்காத பிள்ளை கெடும்.
14) கடன்பட்டால் வாழ்வு கெடும்.
15) பிரிவால் இன்பம் கெடும்.
16) பணத்தால் அமைதி கெடும்.
17) சினமிகுந்தால்அறமும்கெடும்.
18) சிந்திக்காத செயலும் கெடும்.
19) சோம்பினால் வளர்ச்சிகெடும்.
20) சுயமில்லா வேலை கெடும்.
21) மோகித்தால்முறைமைகெடும்.
22) முறையற்ற உறவும் கெடும்.
23) அச்சத்தால் வீரம் கெடும்.
24) அறியாமையால்முடிவுகெடும்.
25) உழவாத நிலமும் கெடும்.
26)உழைக்காத உடலும் கெடும்.
27) இறைக்காத கிணறும்கெடும்.
28) இயற்கையழிக்கும்நாடும்கெடும்
29) இல்லாலில்லாவம்சம்கெடும்.
30) இரக்கமில்லாமனிதம்கெடும்.
31) தோகையினால் துறவுகெடும்.
32) துணையில்லா வாழ்வுகெடும்.
33) ஓய்வில்லா முதுமை கெடும்.
34) ஒழுக்கமில்லாபெண்டிர்கெடும்.
35) அளவில்லா ஆசை கெடும்.
36) அச்சப்படும் கோழை கெடும்.
37) இலக்கில்லா பயணம் கெடும்.
38) இச்சையினால்உள்ளம் கெடும்.
39) உண்மையில்லா காதல் கெடும்.
40) உணர்வில்லாத இனமும்கெடும்.
41) செல்வம்போனால்சிறப்பு கெடும்.
42)சொல்பிறழ்ந்தால் பெயரும்கெடும்.
43) தூண்டாத திரியும் கெடும்.
44) தூற்றிப்பேசும் உரையும் கெடும்.
45) காய்க்காத மரமும் கெடும்.
46) காடழிந்தால் மழையும் கெடும்.
47) குறிபிறழ்ந்தால் வேட்டை கெடும்.
48) குற்றம்பார்த்தால் சுற்றம்கெடும்.
49) வசிக்காத வீடும் கெடும்.
50) வறுமைவந்தால்எல்லாம்கெடும்.
51) குளிக்காத மேனி கெடும்.
52) குளிர்ந்துபோனால்உணவுகெடும்
53) பொய்யான அழகும் கெடும்.
54) பொய்யுரைத்தால் புகழும்கெடும்.
55) துடிப்பில்லா இளமை கெடும்.
56) துவண்டிட்டால் வெற்றி கெடும்.
57) தூங்காத இரவு கெடும்.
58) தூங்கினால் பகலும்கெடும்.
59) கவனமில்லா செயலும் கெடும்.
60) கருத்தில்லா எழுத்தும் கெடும்.

கெடாமல் பாதுகாக்க வேண்டியது அவரவர் பொறுப்பு....... படித்ததில் பிடித்தது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு தனிநாயகம் அடிகளார்... (ஜெயா நடேசன்)



ஆநிரைகள் தெருவெங்கும் செழும் பாலைச் சிந்தும்
செந்தமிழும் வளம் கொழிக்கும் கல்வியில் உயர்ந்தோரும்
தெங்கு பனையும் தேன்சொரியும் பதநீர், இளநீரும்
அங்கமெல்லாம் நோய் அகற்றும் அருமருந்து மூலிகைகளும்
பசுந்தீவின் அழகிற்கோர் எல்லை என்பது இல்லை
பன்னிரண்டு கோடி தமிழினத்தின் விடிவு பிறந்த மண்ணில்
ஆண்டவனின் அருட்பணியாளராய் தனிநாயகம்
அடிகளார் பிறந்தார் நெடுந்தீவின் மண்ணிலே
ஆண்டவன் அடி சேவையாற்றலிலே இசைந்தார்
வாழ்வின் இன்பம் அனைத்தையும் துறந்தார்
ஞானமும் கல்வியும் ஒழுக்கமும் பெற்று உயர்ந்து
கன்னித் தமிழுக்குக் காவலனாய் என்றும் திகழ்ந்தார்
தேசங்கள் பல சென்று அறிவு ஒளியாய் ஒளிர்ந்தார்
கற்றவர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்புப் பெற்றார்
பன்மொழி கற்று உலக மாந்தர்களைக் கலந்தார்
தாய்மொழியைச் சேய்மொழியாய் உயர்த்தினார்
சேய் மகனார் பட்டபாடுகளைச் சொல்ல முடியாதன்றோ
ஏக்கமும் எண்ணமும் எல்லாம் இன்பத் தமிழ் உயர்வே
ஆக்கமும் ஊக்கமும் அகிலத் தமிழன் இணைவே
தோற்றமும் ஏற்றமும் தமிழாராய்ச்சி மகாநாடாய் எழவே
போற்றலும் ஆற்றலும் பூதலப் பெருமையன்றோ
அரும்பாடுபட்ட துயர்வரலாறு வென்றுதரும் சான்றுகளாகும்
பூக்கள் மலரும் தென்றலாய் காவியங்கள் மணம் வீசும்
தமிழ் காக்கும் கண்களாய் காலமெல்லாம் வாழ்ந்தீர்கள்
தேன்தமிழ் மொழிக் கவியால் தீரும்வரை வாழ்த்துவோம்
தெவிட்டும்வரை அவர் புகழ் பாடியே வாழ்த்துவோம்
ஆண்டவரின் சேவைக்காய் அவனருகில் அமர்ந்தவராம்
உலக இறைதந்தை தனிநாயகம் என்னும் அடிகளார்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாயகம் தனிநாயகம்....

பற்றைகள் எல்லாம் தேன்கூடு தேன் வழிந்து
புற்றரைகள் மீது பொழிந்து மண் செழிக்கும் தவநாடு
பனைவளியும் கருப்பணிநீர் உப்புநீர் நிலம் புகுந்து
நன்நீர் வளம் கூட்டும் பெருமை உள்ளது எம்மோடு...

மதுவுண்டு தென்னைகள் ஓலைகள் போடும் கீதம்கேட்டு
அசைந்தாடும் அற்புதம் பார் ஆசைக்கனிவோடு
மடிசுமந்து ஆவினங்கள் பால் பொழியும் கல்வி அங்கே
மடை திறந்து பெருமை சூழக் குடை பிடிக்கும்...

சிலுவை சுமந்த சித்தன் யேசுவின் திருப்பாதம் புவிமீது
அகவைளாயிரமாய் அன்புப் பணிக்கென்று தனைத்தந்து
தணியாத தாகம் தன்னால் வந்து உதித்த தனிநாயகம்-கல்வி
உலகாண்ட உத்தமன் உள்ளங்களாண்ட கருணைக் கடலன்றோ...

ஒழுக்கமும் கல்வியும் பண்பும் காலமளித்தபேறு கம்பீரத்தோடு
அவர்கற்ற மொழி நாற்பதிற்கு மேல் உள்ளவர்கள் காட்டும்
தாய்மொழி தமிழே உலகமொழியாக வேண்டுமென்று கேட்டு
போய்த் தொட்ட பல்கலைக் கழகங்கள் திசைகள் பல எட்டு...

தமிழ்கூறும் ஆய்வுகளுக்கெல்லாம் இவரே முதற் தலைமை
மாநாடுகள் எல்லாம் கோடிட்டுக் காட்டிய பெரும் புலமை
வற்றாத அறிவால் ஒன்றுகூட்டிய தோற்காத ஞானத்திறமை
குற்றால அருவியடா அவர் எம்மேல் கொட்டிய பெருமை...

யாரும் செய்தது இல்லை இப்படியோர் தமிழ்த்தொண்டு
பேரும் புகழும் இன்றும் அவர் காலடியில் விழும்பூச்செண்டு
இணைக்கு வரும் இணை இல்லாப் பெருந்தவப்பேறு-எங்கள்
நாடு அடைந்த எல்லைஇல்லாத் தனிநாயகமே மகிமைவரலாறு...

ப.பசுபதிராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிப் பிறந்த வரலாறு...

(நெடுந்தீவு - முகிலன்)

சாலை ஓரத்துக் குப்பைத் தொட்டிக்குள்
துர்நாற்றம் வீசிக்கொண்டே இருந்தது
போபவர்கள் வருபவர்கள் எல்லோரும்
மூக்கைப் பொத்திக் கொண்டு
சுயநலமாக நகர்கிறார்கள்...

ஒருவரேனும் நின்றுநிதானித்துப் போவதாய்
நான் அவதானிக்கவில்லை-நாற்றம் என்
மூக்கையும்தைத்தது நாக்கையும்பிய்த்தது..

வாடிய வாழை இலையில் சுற்றப்பட்ட
எலும்புகள் தெரியும் படியான
போசாக்குக் குறைந்து போனதான
ஒரு பிஞ்சுக் குழந்தையின்
நிர்வாணமான காய்ந்த சடலம்...

தொப்பிள் கொடியின் துவாரத்திலும்
உதடுகளின் ஈரத்திலும்
பால் உறுப்பிலும் மல வாசலிலும்
ஈக்கள் இரை திரட்டிக்கொண்டிருந்தன...

இரக்கமில்லாமல் ஏன் தானோ குழந்தை
குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டது
வறுமையின் கொடுமையாலோ
முறை தவறிப் பிறந்ததாலோ-அல்லது
பெண்ணாய்ப் பிறந்ததாலோ
வீசப்பட்டிருக்கலாம்...

கேள்விகள் மட்டும் வரிசையாக
எழுந்தன பதில்களைத் தவிர
சடலத்தை அடக்கம் செய்யவாவது
யார்தான் முன் வருவார்களோ
இனி நாளை காலைதானே வரும்
மாநகரசபை குப்பை லொறி...

### அனாதை!...

இந்துவும் கிறிஸ்தவமும்
இஸ்லாமும் ஏனையவையும்
நாட்டில் அநாதை மதங்கள்
பௌத்தம் மட்டும் அரசமதம்!..

### நோய்!...

எல்லோருக்கும் இன்று
வேண்டாத வரவாய்
இருப்பாகிப் போனதுவே
கொரோனா என்னும் நோய்!...

### சக்கரம்!...

ஏழையின் வீட்டில்
நிரந்தரமோ இல்லையோ
வளமாய் இருக்கிறது
வறுமை என்னும் சக்கரம்!...

### மனிதர்கள்!...

மழை வேண்டி
தினப் பூசைகள்
அழியும் காடுகள்
அறியாத மனிதர்கள்!...

-சிவா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ் என்ற நுண்ணுயிரி...

பொன் குலேந்திரன் (கனடா)

தமிழக்குள் சீனக் கிருமி
கொரோனா 19 வைரஸ் என்ற
ஆங்கிலப் பெயருடன் புகுந்து
விட்டது...

கொரோனா பத்தொம்பது பெயரில்
ஊடக பக்கங்களை நிரப்பத்
துணை போகிறது நுண்ணுயிரி
அமெரிக்கா, அமெரிக்கா என்று
பணம் தேடி சென்றவர்கள்
படுகிறார்கள் அங்கு அவதி...

அமெரிகர்களுக்கு புரியுமா
தமிழன் கலாச்சாரத்தின்
நுண்ணுயிரிக்கு எதிரான
சூட்சுமம்.
கை கூப்பி வணங்கும் முறை
கை கொடுக்கிறது
இப்போது மேற்கத்தியனுக்கு...

ஆறடி தூரத்தில் வைக்கிறது
நுண்ணுயிரி இருவரை அருகில்
அணுகாமல் .
உண்ண முன் கை கழவு
உலகுக்கு எபேவோ சொன்னது
தமிழன் கலாச்சாரம்...

மஞ்சள் நீர் ,சாம்பிராணி புகை
தனக்கு எதிரி என்பதை
அறிந்தது நுண்ணுயிரி.
கட்டித் தழவி காதலியை
முத்தமிட தடைவிதித்தது
நுண்ணுயிரி என்ற நோயக்கிருமி

சிவப்புத் தேசகாரன்
உருவாக்கினான் திட்டம் போட்டு
கொரோனா என்ற நுண்ணுயிரியை
தோற்றத்தை அறியும் புலனாய்வில்
வெளவால் என்றனர் ஒரு சிலர்
மனிதன் தவறு என்றனர் வேறு
பலர்...

நாடுகளை தன் கைக்குள் வைக்க
சென்நிற தேசம் போட்ட திட்டம்
வளர்த்ததுஉலகில் புது அரசியலை.
உலக பொருளாதாரம்...
உருக்குலைந்து வறுமையை
வளர்ந்து அதில் தேர்தல் வேறு
தேவையா?...

இனம் ,மதம் தேசங்கள் என
பாராமல் உள்ளே புகுந்தது
சுற்றுலாவடிவில்
வைரஸ் என்ற நுண்ணுயிரி...

அணுகுண்டு அழித்தது உயர்களை
அதை விட அழிவு
அதிகம் நுண்ணுயிரின் வருகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமாய் வீதியில் நடந்த
எம்மை முடங்கி வீட்டில் கிட,
என செய்தது நுண்ணுயிரி....

முகமூடி கள்ளன் தோற்றத்தை
மனிதனுக்கு கொடுத்து
மகிழ்கிறது நுண்ணுயிரி....

உன் அலுவலக வேலையை
வீட்டில் வைத்து செய்
என செய்தது நுண்ணுயிரி....

வீட்டில் முடங்கி இருப்பவனுக்கு
குடித்து குடும்பத்தை துன்புறுத்த
துணை போகிறது நுண்ணுயிரி....

மருத்துவத் துறை சேவைக்கு
நுண்ணுயிரி ஒரு சவால்
வெல்வது நிட்சயம் மனிதன்...

-----------

# தீட்டு

கோயில் கிணற்றில்
எலி விழுந்தது
அது தீட்டாகப் படவில்லை
அக்கிணற்றில் நான்
குளித்த போது
கிணறு தீட்டாகிவிட்டது
என்கிறது ஊர்.
எலிக்கு இருக்கும் மரியாதை
எனக்கு இல்லையா?....

# இந்தக் கொரோனா!...

(கவி மீனா)

கொரோனா வந்ததாலே
பலருக்குக் கள்ள வேலை
போச்சுது
எல்லாரும் வீட்டிலிருப்பதாலே
கள்ளருக்கும் வேலை போச்சுது
கள்ளுக்கடை பூட்டியாச்சு
கள்ளக் காதலருக்கும் ஆப்பு
வைச்சுது...

காதல் பண்ணும் இளசுகளை
கட்டுக் கோப்பாய் நடக்க
வைகுது
இதழ் முத்தம் கொடுக்காமே
காற்றில் முத்தம் கொடுக்க
வைக்குது...

நல்ல நட்பை கூட 2 மீற்றர்
தள்ளி வைக்குது
கட்டியசோடியைக்கூட கட்டிலைப்
பிரித்துப் போட வைக்குது
பெத்த பிள்ளையைக் கூட
கட்டி அணைக்க முடியாமல்
கையை கட்டிப் போடுது...

கழநாயைப் போலே
மஸ்க் போட்டு
அலைய வைக்குது
முக அழகை மறைத்து
புன்னகையை மூடி
பேய் போலே திரிய வைக்குது
இந்தக் கொரோனா செய்வது
நன்மையா தீமையா?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று புதிதாய் பிறந்தேன்.....

ஏ எஸ் பிரான்சிஸ்

## எழுதப்படாத கவிதை....

கருமேகம் வானில் சூழ்ந்தது
போல் இதயம் கருத்திருக்கும்..
மன ஆழத்தில் விடிவெள்ளியாக
உதித்த கருத்து வெளிப்படாமல்
பூமியில் புதைந்திருக்கும்!
கவிதை வடிக்க மனம்
துடிக்கையில் விரல்கள்
வேலைநிறுத்தம் செய்யும்!
அலமாரியில் அடுக்கப்பட்ட
புத்தகக் குவியல்களிடையில்
ஆழ்மன சிந்தனை தாசு
படிந்து அடைபட்டிருக்கும்!
தன்னம்பிக்கையைத் தன்னில்
அடைகாத்திருக்கும்
கருத்து கருவூல
நூல்கள் கருவாடாய்
காய்ந்திருக்கும்!
மாமனித சுயசரிதைச்
சொல்லும் நூல்களை வாசிக்கும்
கண்களுக்காக அவை
காலமெல்லாம் கன்னியாகக்
காத்திருக்கும்!
காதல் இதயத்தில் வரிவரியாக
எழுதப்பட்டக் கவிதைகள்
பின்வாசல் வழியாக
மவுனமாக வெளியேறின!
எழுதப்படாத கவிதைகள்
நூல் நிலைய ஜன்னல்
திரைச்சீலைகள் போல
அசைந்தாடிக்
கொண்டிருக்கின்றன!..

## மூன்றாம் உலகப் போர்....

அதோவருகிறதுஇதோவருகிறது
என புலி வரும் பூச்சாண்டி
கதை சொன்னார்கள்..
அப்படிவரும் இப்படிவரும்
உலகம் அழியும் என படைப்புக்
கடவுளாக சோழி போட்டு ஆரூடம்
சொன்னார்கள்...
கோளங்கள் மோதிக்கொள்ளும்!
பெரும் நெருப்பு மழை பொழியும்!
வானம் இடிந்து பூமியில் விழும்!
கடல் பூமியை விழுங்கும்!
பல நூற்றாண்டுகளாக பல்போன
விற்பன்னர்கள் தீர்க்கதரிசிகளாய்
உலகஅழிவை முன் குறித்தார்கள்!
உலகம் ஆடாமல் அசையாமல்
நிதானமாக நிற்கிறது குறி
சொன்னவர்கள் குழியில்
மண்ணானார்கள்! பூமியின்
அழிவைக்காண மனுக்குலத்திற்கு
காலம்தோறும் கடல் அலையாய்
கற்பனை பெருகிய பேராவல்!
இதோ துவங்கி விட்டது மூன்றாம்
உலகப் போர்! கண்ணுக்குத்
தெரியாத 'வைரஸ்' எதிரி
மனுக்குலத்தைஅழிக்க அச்சத்தின்
உச்சத்தில் மானிடர்கள்! மனித
இனம் முற்றாக மூட்டை பூச்சியாய்
அழிந்தாலும் அழகிய உலகின்
உச்சியில் ஆண்டவன் புன்னகை
சிந்தி அமர்ந்திருப்பான்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவிற்கு ஒரு கடிதம்..........

அன்புள்ள கொரோனாவுக்கு நாங்கள் இங்கு நலம்
உன் நலம் அறிய துடித்துக்கொண்டிருக்கிறோம்
உன் வருகையை இட்டு மனம் துவண்டபோதும்
ஒரு சில மகிழ்ச்சி என்னுள் ஊசலாடுகிறது...

காலமதில் காலாவதியாகி கடந்துசென்ற என்னை
புதிதாகஉருவாக்கி இயற்கையோடு பேசவைத்தாய்
பூமியினுள்ளே புதைந்திடுவேன் என்ற அச்சத்திலும்
புதிதாக இரசிக்கிறேன் ஒவ்வொரு விடியலையும்...

அண்டம் பிளந்தவனும் அணுகுண்டு கொண்டவனும்
அகங்காரம் பிடித்தவனும் அசுரத்தை கொண்டவனும்
அழிவதனை அறியுமுன்னே அடியற்ற மரம் போல்
அணு அணுவாய் பீதியில் நடமாடி திரிகின்றனர்...

உன் பெயரை சொல்லி கொண்டே உலகமெல்லாம்
உருண்டுகொண்டு ஊன் உறக்கமின்றி கிடக்கிறது
உல்லாச பயணிகளின் உன்னதமான தேடலதை
ஒரு கணத்தில் எவ்வாறு முறியடிக்க முடிந்தது...

இனவெறி கொண்டவரும் மதவெறி கொண்டவரும்
இகலாட்டம் இல்லாது இயல்பின்றி கிடக்கின்றனர்
இயற்கையிலே இறைவனை கண்ட காலம் போய்
மனிதனவன் உருவத்தில் இறைவனை கண்டோம்...

கோயிலது திறக்கையில் தொழுதுவிட யாருமில்லை
தொழுதிட எண்ணினால் கோயிலது திறக்கவில்லை
மாற்றத்தின் சக்கரத்தில் ஓடிக் கொண்டிருக்கையில்
இந்த நிலை மாறிவிடுமா என்று ஏங்குகின்றோம்...

பெண்ணாசை மண்ணாசை பொருளாசை எல்லாம்
நீ வந்துபோனதால் தடம் மாறி போய்விட்டது
நினைத்ததெல்லாம் நடந்துவிடும் என்ற மோகத்தால்
நினைக்காமல் தரணியிலே பேரழிவு ஏற்பட்டது...

செல்வி லோஜிகா அண்ணாமலை
ஆரம்ப உயர்தரம் கலைப்பிரிவு
யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண் சஞ்சிகை- 201
## அட்டைப்படக்கவிதை...



உலகம் மெல்லமெல்ல உறைந்தது வாய்க்கிடப்பதென்ன
உதவுவதற்கும் நீளும்கரங்கள் உளம்மிரண்டு விளிப்பதென்ன
கலகமே தோன்றினாற்போல் கலக்கங்கள் கொள்வதென்ன
கருணையினைக் காட்டிடுமாறு கடவுளரைத் தொழவதென்ன

கடல்கள்தாண்டிய கொரேனா கண்டங்களில் நுளைவதென்ன
கலக்கத்திலும் மானிடம் முழுதாய் கதவடைத்துத் தவிப்பதென்ன
உடல்களுக்குள் நுளைந்த கோவிட் உதிரத்துள் உறைவதென்ன
உயிர்குடித்து உறவறுத்து உடலம் தனிமையில் புதைவதென்ன

மருத்துவத்தின் உச்சத்தேடல்கள் மழுங்கியே இருப்பதென்ன
மடிகின்ற உடலங்கள் விரைந்து மலைகளாகக் குவிவதென்ன
குருத்துகளும் கருகிச் சாய்ந்து குற்றுயிராய்த் துடிப்பதென்ன
குவலயமும் மௌனமாகியதுபோல் குரல்வற்றிப் போனதென்ன

அடைபட்ட வாழ்வியலும் தினம்தினம் அல்லாடிப் போவதென்ன
அலைகடலாய் வேதனைகள் அன்றாடம் நீண்டு விரிவதென்ன
துடைத்திட முடியாத அறிவியல் துவண்டு விழித்திருப்பதென்ன
துருவ நட்சத்திரமாயத் துளிநம்பிக்கை துளிர்த்து நிற்பதென்ன..



## மயில்வாகனமும் தனிநாயகமும்



தாழ்பணியணியும் கண்ணகியம்மன் தண்ணருள்பெற்ற காரைதீவினில்
சாமித்தம்பியின் மகனாய் உதித்ததளிர் தரணியெங்கும் படர்ததுவாய்
நீள்கடல்சூழ் நித்திலம் கொழித்து நீந்திவரும் நெடுந்தீவுப்பதியில்
நாகநாதன் கென்ரி மகனாய் தவழ்ந்து நானிலம் எங்கும் உறைந்திட
சூழ்ந்திருக்கும் அறிஞர்கள் நடுவே சுடர்களாய் ஒளிர்ந்திருந்த காலை
சுற்றிவந்ததே சங்கங்களில் சுந்தரத்தமிழையும் இசையையும் ஆய்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடதிசைவரைப் பயணித்து குவலயத்துக்கு ஒளிகொடுக்கும் கதிராய்க்
குணதிசையில் உதித்தசூரியன் தமிழ்க்குலத்தின் ஆசானாயானதுபோல்
வடதிசையில் ஒளிப்பிழம்பாய் வண்ணக்குளிர் நிலவாய் ஒளிபரப்பியே
வையகத்தின் இருளகற்றவந் தொளிர்ந்து வலம்வந்ததும் ஆசானாய்
மடைதிறந்த வெள்ளமென மானிடத்தின் மனஅழுக்குகளைக் கழுவி
மறையோடு மொழியாலும் மனிதநேயப் பணியாற்றினவே இருசுடர்கள்

உள்ளக்கமலத்தையே உத்தமனாருக்கு உவந்தளிக்கும் இன்மலரென
உளமாற்றத்தினால் மயில்வாகனன் உயர்விபுலானந்த அடிகளானதுவாய்
வெள்ளைக் கலையுடுத்திய வேதசரஸ்வதியின் உருவமாய்க் குருவாகிய
சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் தமிழ்ப்பற்றினால் தனிநாயகம் அடிகளானார்
வெள்ளத்தின் மலர்நீட்டமாய் இருவரும் வேதங்களைப் பயின்றிட்டாலும்
வேண்டுவோர்க்கு கல்வியினைப் புகட்டிடவிரும்பியே ஆசிரியராயினர்

பண்டிதர்களில் முதல்வராய் பண்புள்ள பேராசிரியராயக் கொழும்பில்
பணிபுரிந்து அண்ணாமலைப் பல்கலைகழகத்தலைமை அரியணையேறிட
பாண்டித்தியங்கள் பன்மொழிகளில் பெற்று பேராசிரியராய்க் கொழும்பில்
பணியாற்றி மலேசியா முதல் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தலைவரானார்
கண்ணியமாய்க் கவின்தமிழோடு கலைகளை ஆராய்ச்சிசெய்த இவர்கள்
கடல்கடந்து சென்று ஆங்கிலப்பட்டதாரியாய்க் கல்லூரிப்பேராசிரியரானார்.

ஆங்கில இலக்கியத்தையும் அயல் மொழி நாடகங்களையும் நுகர்ந்து
அன்னைத் தமிழுக்கு மொழிபெயர்த்து அடிகளார் நூலாய்ச் சமைத்தார்
தாங்கிய தமிழ்மொழியின் தடங்களைத் தேடியாய்ந்து வேர்களை அறிந்து
தாமறிந்த எண்மொழிகளில் தனிநாயகமடிகளார் நூல்களாயாக்கினார்
ஓங்கிடும் ஆசான்களாய் உலகத்தின் பல்வகை பல்கலைக்கழகங்களில்
உயர்பீடத் தலைமையேற்று உலகம்போற்ற இருவரும் பணியாற்றினர்

மணவாழ்வொன்றை தங்களது மனதிலும் எண்ணிடாது மனவுறுதியோடு
மானிடநேயத்துடன் மறைகளையும் ஓதி சுவாமிகளாய் மிளிர்ந்ததுபோல்
குணங்களில் உயர்குன்றுகளாய் குவலயம் கல்வியால் ஓங்கிடஉழைத்து
குறிப்பறிந்து கல்விச்சாலைகளைமைத்து கொடுத்திட்ட சுவாமிகளிருவரும்
இணையில்லா இருசுடர்களாய் அறியாமை இருளகற்றும் பணிமுடித்திட்ட
இவ்வுலகிற்கு ஒளிதருகின்ற சூரியசந்திரர்களை இதயத்தால் போற்றிடுவோம்.!

-அம்பலவன்புவனேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோடையின் வரட்சி...

பாலைவனமாய் காட்சி
வரண்டுபோகாது மீட்க
வளமே வையத்து தருக்கள்
காற்றின் சுத்தம்
ஆவியீர்ப்பு -மழைவளம்
மண்வளம் குன்றாத செழிப்பு
நிழலின் கொடையென
புவிவளம் பேணிடும் -தருவளம்
தாங்குவோம். சூழல்வசப்படும்
சுகாதாரம் நிலைப்படும்...

## என்செய்தேன்..

இத்தருணம்காண....
பசுமை உலகில் படரும்
வெளிச்சம்தகமை பலதாய்
தற்காக்கும் பருவம்
இமையே மூடாத விழிக்குள்
வருடும்தாயின் பாசமே தைரிய
வானம். அழகியல் நெய்த
அணைப்பின் சுவாசம்
கருவெனத் தாங்கும் கம்பீர
உலகம். அன்னையின் அன்பே
ஆதாரஅகிலம் அவனியின்
இமயத்தில் அடையாளபந்தம்
மெய்ப்படு தருணமாய் சுருதியின்
மீட்டல் சேயின் அணைப்பில்
தாயின் நெகிழ்வு என்செய்தேன்
இத்தருணம் காண-என
இழைந்து குழையும் ஈடிற்கு
நிகரேது...

## மரத்துப்போனது மானிடநீதி...

கணதியின் வாழ்வில்
கரைந்திடும் பொழுதில்
மனிதம் புதையுதுமாண்புகள்மறையுது
இதயம் இருளுது ஈரம் குன்றுது
இடரின் தேட்டமே இறுகிவிளையுது

உறவுகள் விலகுது
உபாதைகள் பெருகுது
உதவிகள் மறையுது உபத்திரமாகுது
அறிவுக்கண்ணில்அன்னியப் பார்வை
அகிலத்திரையில் அநீதியின்கூர்மை

மனிதநேயம் மறைந்து போகுது
மானிட நீதி மரத்துப் போகுது
அநீதியின் விம்பம் ஆலமரமாய்
அநுதினம் வளருது ஆணிவேராய்

பொசுங்கிடும் இதயத்தில் பூப்பதுபாரம்
நசுங்கிடும் வாழ்விற்குள்நலியுதுகாலம்
மீண்டும் பிறக்குமா மனிதநேயம்
மீளவும் தளிர்க்குமா மானிடநியாயம்.

வசந்தா ஜெகதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா-கோவிட்-19....

(ஜெயா நடேசன்)

மனிதவாழ்க்கையில் கல்லும் முள்ளும், மேடும் பள்ளமும், இன்பமும் துன்பமும், நோயும் நொடியும் வந்துகொண்டே இருக்கும். நாளாந்தம் ஏதோ பிரச்சனைகள் ஒளிர்ந்துகொண்டே இருக்கும். போர்த்தாக்கம் வரும் இயற்கை அழிவுகள்வரும் நோய்கள் பல வந்துபோகும். இப்படியான அனர்த்தங்களை மனிதன் போராடித்தான் வெல்ல வேண்டும் மாறாகப் பிரச்சனைகளை எதிர்கொண்டு செயற்பட எல்லோரும் ஒத்துழைத்து வாழ்ந்தால்தான் பலன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இன்றைய அவசர உலகில் எல்லாமே அவசரமாக ஆரம்பித்து முடிவாகின்றது. இன்றைய நிலையில் கொரோனே வைரஸ் தொற்றினால் உலகே கட்டிப் போடப்பட்டுள்ளது. மக்களே பயந்த நிலையில் ஒதுங்கிக்கொண்டனர். ஆனால் தனிமைப்படுத்தப்படாத நிலையில் சில நாடுகளில் இந்த நோய் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. அதிக உயிர்களையும் பலிகொண்டு இற்றைவரையும் முடிவில்லாது தொடரும் வியாதியாகவே காணப்படுகின்றது.

கிரீடம் அணிந்த இந்த வைரஸ் பூனைக்குடும்பத்தில் பூனை, எலி, பாம்பு, வெளவால், எறும்புதின்னி எனப்பல உயிரினங்களுக்கு உள்ளதுபோல இந்தக் கொரோனா வைரஸ் குடும்பத்தில் மனிதரைத்தாக்கும் வைரஸ் எனக்கண்டறியப்பட்டுள்ளது. பறவைகளைத்தாக்கும் வைரஸ் பறவைக்காய்ச்சல் எனவும் விலங்கு களைத்தாக்கும் வைரஸ் பன்றிக்காய்ச்சல் எனவும் பல பிரிவுகள் உள்ளன. நுண்ணோக்கி வழியே பார்க்கும்போது கிரீடம் கிறவுண் போல அல்லது சூரியனைச் சுற்றி இருக்கும் ஒளிக்கதிர்கள் கூர்முனைகளைக் கொண்டு தென்படுவதால் கொரோனா வைரஸ் குடும்பம் எனப்பெயர் ஏற்பட்டது.

மனிதர்களைத் தாக்கும் கோவிட் வைரஸ் 229 E, NL63, OC43, HK01 ஆகிய நான்கும் ஆபத்து அற்றதாம். உடல் உபாதைகளை ஏற்படுத்தும் Mers-COV மற்றும் Sars-Cov ஆகிய இரண்டும் கிருமி தாக்கியவர்களில் சிலருக்கு மரணம் சம்பவிக்கும் அளவிற்கு நோயை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவதாக உருவானதுதான் இந்த SARS-COV-2 ஆகும். எனவேதான் புத்தம் புதிதாகச் சமகாலத்தில் பரிணமித்த இனப்பிரிவு எனப்பொருள்படும். "நாவல்" என்ற அடைமொழியோடு நாவல் கொரோனா-19 எனப்பெயர் சூட்டப்பட்டது. பூட்டை உடைத்துத் திருடன் நுழைவது போல, கள்ளச்சாவி போட்டுக் கதவைத் திறந்து வைரசுகள் நுழையும். ஒவ்வொரு பூட்டின் சாவியும் வெவ்வேறு வடிவில் இருக்கும். இதனால்தான் எல்லா வைரசுகளும் எல்லா உயிர்களின் செல்களில் புகுந்து விட முடிவதில்லை.

இதன் காரணமாகவே மாடுகளுக்கு நோய் ஏற்படுத்தும் வைரசுகள் பல சமயம் மனிதர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது. ஏறக்குறைய பந்து வடிவில் இருக்கும் கொரோனா வைரசுகள் மீது குறிப்பிட்ட புரதத்தினால் ஆன கூர்முனைகள் உள்ளன. இந்தக் கூர்முனைகளைக் கொண்ட விலங்குகள் மற்றும் மனித செல்களை இந்த வைரஸ் பற்றிக்கொண்டு துளையுண்டு உள்ளே நுழையும் தன்மையுள்ளது. இதன்பின் தடிமல், சளி, காய்ச்சல் ஏற்பட்டு சுவாசப்பையில் சென்று சுவாசிக்க முடியாமல் மரணிக்கிறார்கள்.

தாயகத்தில் ஒருவருக்குத் தொற்றுநோய்களான அம்மை, பொக்குளிப்பான், சின்னமுத்து ஏற்பட்டால் தனிமைப்படுத்தி சுத்தமான அறையில் கிருமிநாசினி என மஞ்சள், வேப்பிலை பாவித்து மிகக்கவனமாக இருந்து, குளிர்மையான மோர், பதநீர், தோடம் பழச்சாறு, எலுமிச்சைச்சாறு, இளநீர், வெங்காயம் கொடுத்து பாட்டி வைத்தியத்திலே குணமாக்கிவிடுவர். ஆனால் இன்றைய கொரோனா வைரசால் தனிமைப்படுத்தலே முக்கிய இடம்பெறுகின்றது.

இருந்தும் இந்த வைரஸ் உலகிற்கு வந்தது சிறிது நன்மை என்றும் கூறலாம். பிள்ளைகளின் தொடர்பு, பிணைப்பு கூடுகின்றது. வீட்டிலிருந்து கொண்டே பல விடையங்களை அறிந்துகொண்டார்கள். அத்துடன் உலக ரீதியாகப் பார்க்குமிடத்து சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டது. பூமியின் வெப்பத்தைக் குறைப்பதற்காக மக்கள் புகைபிடிப்பு குறைந்தது. தொழிற்சாலை, வாகனங்களின் புகை குறைந்ததால் ஓசோன் மண்டலம் பாதுகாக்கப்பட்டது. இந்தப் பூமியைச் சமநிலைப் படுத்துவதற்காக இந்த வைரசால் மனிதன் பல முரண்பாடுகளை மறந்து மனிதநேயத்துடன் வாழ வழிவகுத்துவிட்டது என்றும் கூறலாம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா.......

(சிறுகதை)

-கவி மீனா-

சீனா காரன்தான் கொரோனா வீருஸ்சை கண்டு பிடிச்சு மற்ற நாடுகளுக்கு ஏவி விட்டதாக ஒரு வதந்தி பரப்பினம் அப்படி அவனது செயல் என்றால் அவன் ஏன் தன்ரை நாட்டுக்கே அதை விடுகிறான்? சிந்திக்காமல் புரளி பேசும் மனிதர்கள் கொஞ்சம் சிந்திச்சுப் பாருங்க! அப்படி இந்த நோய்க் கிருமி சீன தயாரிப்பு என்றால் அவன் எம்மட்டு புத்தி சாலி பாருங்க! அணுக்குண்டை தயாரிக்கும், றொக்கெற்றை விண்வெளிக்கு விடும் அமெரிக்கர்களால் கூட இதை அழிக்க ஒரு மருந்தை கண்டு பிடிக்க முடியவில்லையே! ஒரு நாட்டையல்ல அகில உலக நாடுகளையே நடுங்க வைக்குது இந்தக் கொரானோ, கட்டியணைத்து முத்தமிட்டவர்களும், கட்டிப்பிடி வைதியம் பார்த்தவர்களும், டிஸ்கோ, பார் என்று கூடிக் கும்மாளம் போடுபவர்களாலும் ஒன்றும் செய்யமுடியவில்லை

இன்றைய நவீன காதலர்கள் அதாவது தினம் ஒருவனையோ ஒருத்தியையோ மாத்தி மாத்தி பிடித்துச் சல்லாபிக்கும் நவீன காதலர்களாலும், சாமத்தியம், கல்யாணம், காதலர்களாலும், சாமத்தியம், கல்யாணம், வளைகாப்பு,பிறந்தநாள் என்று கொண்டாட்டங்கள் வைத்து கூடிக் குழுமி போடுகிற ஆடம்பர விழாக்களாலும், செத்தவீடு ஊரிலை நடந்தாலே இங்கே கூடி அழும் நம் தமிழர்களாலும் கடத்தபடும் இந்த வீருஸ் அப்பாவி மக்களையும் சேர்த்து கொல்லுது தெரியாமல் பக்கம் நின்ற காரணத்தாலே! இதன் தீவிரத்தை உணர்ந்து இனியாவது தள்ளி நில்லுங்க, ஆளை ஆள முட்டாமல் தூர நின்று கைகாட்டுங்க என்று சொன்னாலும் இந்தச் சுவையை கண்டவர்களுக்கு அதை ஏற்றுக் கொள்ள முடியாது, களவாக த்தன்னும் சந்திச்சு கட்டிப்பிடி வைதியம் பார்க்கிறாங்க!

அப்ப நோய் பரவாமல் என்ன செய்யும்? ஒரு உடம்பில் பதினாலு நாள்தான் இந்தக் கொரானோ உயிர் வாழுமாம், ஒரு முறை கொரானோ பிடித்து அதிலிருந்து தப்பி உயிர் வாழுபவர்களுக்கு அது மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தாதாம். ஆனால் கோரோனா தாக்கிய மனிதர்கள் கை பட்ட இடத்தில் கூட கொரானோ குறைந்ததுஒரு சில மணித்த்தியாலம் குந்திக்கொண்டு இருக்குதாமே சாகாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவனை காவு வாங்க! பேய் பிடிச்சால் கூட ஒருவனையோ ஒருத்தியையோதான் பிடிக்கும் ஆனால் இந்த கொரானோ டப் டப்பென்று பாய்ந்து பாய்ந்து பிடிக்குது கைக்கு எட்டிவர்களை எல்லாம்.இது ஒருவேளை வேற்று கிரகங்களிலிருந்து வந்து இறங்கியிருக்குமோ எனக்கு ஒரு சந்தேகம்தான் மற்றவனை சொல்லிபோட்டு நான் வேறே புரளி கிளப்பி விடவில்லை ஆனாலும் யோசிக்க தோணுது,

எந்தச் சரித்திரத்திலும் இப்படி ஒரு நோய் அகில உலகையே அள்ளிக் கொண்டு போக பரவவில்லை! இது ஒரு பார தூரமான பாதிப்பு! கொரோனா கோரோனா கருணை காட்டு என்று கேட்டாலும் வீடுகுது இல்லை, யாருக்கும் அஞ்சாத சனங்கள் கூட இந்த நோய்க்கு அஞ்சி ஒழிக்க நேரிடுதே!

பெற்ற பிள்ளைகள் பேர பிள்ளைகளை கூட அணைக்க முடியாது தடுக்கும் இந்த நோய் மனிதர்களுக்கு வந்த சாபக் கேடே! வட்ஸ்அப்பிலும், ஸ்கைபிலும் பிள்ளைகளுக்கும், பேரபிள்ளை களுக்கும் முத்தம் கொடுக்கும் காலமிது, இணையத்தோடு இணைய தெரியாத வயோதிபச் சனம் எம்மட்டு தனிமையிலே பூட்டிய வீடுகளுக்குள் மனமொடிந்து சாகுதுகள்,இது யார் செய்த பாவமோ நான் அறியேன்.

அன்று ராவணன் ஒருவன் செய்த பாவத்துக்கு அனியாயமாக இலங்கையே தீபிடித்து எரிந்ததாம் அதுபோல் இன்று எவன் செய்த பாவமோ எல்லாரையும் பிடித்து விரட்டுது. கைகழுவு கைகழுவு என்று சொல்கிறார்களே கை கழுவி விட்டால் உறவுகளை கைகழுவி விடலாம், ஆனால் கொரானோவை கை கழுவினாலும் மூக்கினூடாக அல்லது வாயினூடாக உள்ளே போய் விடும்.

இப்போதெல்லாம் முகத்தை மூக்கை மூடிகொண்டுதான் வெளியே போக வேண்டியிருக்கு முகமூடி கொள்ளைக்காரர்களைப் போலே, இதிலை பக்கத்திலை உண்மையான முகமூடி கொள்ளைகாரன் நின்றாலும் தெரியாது பாருங்க! இன்றைக்கு கதைச்ச ஆளு நாளை இருப்பாரா? என்பதே தெரியாத நிலமை இன்று, சிலபேருக்கு எந்த நோய் தொத்தினாலும் ஒன்றும் செய்யாது ஆனால் அவர்களால் மற்றவர்களுக்கு இந்த நோய் பரவ வாய்ப்பு உண்டு.கடைகளுக்குள் குறைந்தது 2 மீற்றர் தள்ளி நிற்கச் சொல்கிறார்கள் ஆனால் கடைக்குள் முந்தியடித்து சாமான்களை அள்ள நிக்கும் சனங்கள் இடித்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக நீக்கும் போது இடைவெளி குறைந்துதான் போகிறது. சாவு என்பது எல்லாருக்குமுண்டு ஆனால் ஒட்டுமொத்தமாக செத்தால் ஒழுங்கான செத்தவீடு கூட நடக்காது. கும்பலோடு கோவிந்தா கோவென்று எங்கை கொண்டு போய் போடுறாங்களோ தெரியாது.சாம்பலை கடலிலை கரைக்காட்டி ஆவி அந்தரத்திலை தொங்கும் ஆத்ம சாந்தியின்றி, அந்த பயம்தான் பாருங்கோ எனக்கு! பிறப்பெடுத்து அந்தரித்தேன் இறப்பின் பின்பும் அந்தரிப்பா? அதை நினைத்தால்தான் பயம் வருகுது! கடவுளை கும்பிடும் இந்துக் கோவில்கள், தேவாலயங்கள், மசூதி யாவற்றையும் மூட வைத்தது கொரோனா! அப்படியானால் கொரோனா ஒரு நாஸ்தீகன் என்பது தெரிகிறது. எந்த கிரகத்திலிருந்து வந்தது என்பதுதான் புரியவில்லை எனக்கு! புரியாத புதிராக கொரோனா கண்ணுக்குத் தெரியாத எதிரியாகக் கொரோனா!.....

---------------------

# ஐரோப்பிய தலைநகரங்களின் சனத்தொகை

**ஐரோப்பா நாடுகளின் தலைநகரங்களில் அதிகூடிய சனத்தொகை கொண்ட முதல் பத்து நகரங்களும் சனத்தொகையும்..**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01-Britain | - London | - 8.98 Million | 06-Romania- | Baucharest | - 1.88 Million |
| 02-Germany – Berlin | | - 3.52 " | 07-Austria- | Vienna | - 1.86 " |
| 03-Spain | - Madrid | - 3.20 " | 08-Poland - | Warsaw | - 1.80 " |
| 04-Italy | - Rome | - 2.78 " | 09-Hungary- | Budapest | - 1.75 " |
| 05-France | - Paris | - 2.20 " | 10-Czech Republic- | Pargue | - 1.29 " |

**( 1 மில்லியன் = 10 லட்சம் )**

**( உதாரணம்:- பிரித்தானிய தலைநகரம் லண்டனின் சனத்தொகை 89 லட்சமாகும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனிநாயகம் அடிகளார்

பிறப்பு-02-08-1913 மறைவு-01-09-1980

"நான் ஒரு சொற்பொழிவாளனோ அன்றி எழுத்தாளனோ அல்லன். ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆர்வமிக்க மாணாக்கனே ஆவன். எனவே தமிழறிவிற் சிறந்த பெரியோர் பலர் கூடிய இப்பேரவையில் உரைநிகழ்த்து வதற்கு அதுவும் சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள் பற்றி உரைநிகழ்த்துவதற்கு அஞ்சுகிறேன்." இவ்வாறு யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நிகழ்ந்த நான்காவது உலகத் தமிழாராய்ச்சி விழாவில் அவையடக்கம் கூறினார் அறிஞர் தனிநாயகம் அடிகளார். அவையடக்கம் அவையை அடக்கும் வகையே என்பதை அவரது உரை அங்கு புலப்படுத்தியது.

தனிநாயகம் அடிகளார் ஈழம் தந்த பேரறிஞர்களுள் ஒருவர். தமது வாழ்நாள் முழுவதும் தமிழ்த் தொண்டாற்றிய தமிழ்த் தூதர் ஆவர். அவரது தமிழ் வாழ்வாகவே அமைந்திருந்தது.

தனிநாயகம் அடிகளார் ஈழம் தந்த பேரறிஞர்களுள் ஒருவர். தமது வாழ்நாள் முழுவதும் தமிழ்த் தொண்டாற்றிய தமிழ்த் தூதர் ஆவர். அவரது தமிழ் வாழ்வாகவே அமைந்திருந்தது. இவர் பிறந்தபோது சேவியர் என்னும் பெயரிடப்பட்டது. தனக்குத்தானே தனிநாயகம் என்னும் பெயரையும் சேர்த்துக் கொண்டார். அப்பெயரே அவர் தமிழ் உலகில் தனி நாயகமாக, தன்னிகரில்லாத் தமிழ் அறிஞராக வலம்வருவதற்குக் காரணமாயிற்று எனலாம்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற திருமூலரின் வாக்குக்கமையத் தமிழ்ப் பணியையே தெய்வப் பணியாகக் கொண்டு உல கெல்லாம் சென்று தமிழ் வளர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் இலட்சியப்படி தம் வாழ்வை அமைத்துக்கொண்ட பெருந்தகை அவர்.

1913ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி (1913-8-2) ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கரம்பொன் கிராமத்தில் நெடுந்தீவைச் சேர்ந்த ஆசிரியர் கணபதிப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் அவர்களுக்கும் சிசிலி இராசம்மா என்பவருக்கும் மகனாகப் பிறந்தார். ஊர்காவற்றுறையிலுள்ள புனித அந்தோனியார் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் கல்வி பயின்றபின் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு கல்வி பயின்று 1930 இல் தனது பதினேழாவது வயதில் கேம்பிறிஜ் சீனியர் பரீட்சையில் சித்தி பெற்றார். பின்னர் துறவு வாழ்வில் ஈடுபடும் ஆர்வத்தினால் உந்தப்பட்டு குருவானவராகப் பயிற்சி பெறும்பொருட்டு கொழும்பிலுள்ள புனித பேனாட் குருமடத்தில் சேர்ந்தார்.

பின்னர் இந்தியாவிலிருந்து கொழும்பு வந்திருந்த இந்தியப் பேராயர்மாரின் அழைப்பால் இந்தியா சென்றார். அங்கு பயின்று முடிய இத்தாலி றோமாபுரிக்கு 1934ம் ஆண்டு சென்றார். உரோமாபுரியில் உள்ள "ஊர்பான்" குருத்துவ சர்வகலாசாலையில் கல்வி பயின்றார். அங்கு அவர் இறையியல் கலாநிதிப்பட்டம் பெற்றார். 1939ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார். அங்கு இருந்த பொழுது "திருவெளிப்பாடு" உரைச்சுருக்கம் என்னும் நூலை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

ரோமாபுரியில் திருநிலைப்படுத்தப்பட்ட பின்பு அடிகளார் மீண்டும் தமிழகம் சென்று வடக்கன்குளம் என்ற இடத்தில் புனித திரேசாள் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அங்கு குருசாமி என்னும் தமிழ்ப்பண்டிதரிடம் தமிழை முறையாகக் கற்றார். தமிழில் பேரார்வம் கொண்டிருந்தபடியால் அங்கிருந்த ஆயர் றோச் ஆண்டகையின் அனுமதியுடன் தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து மொழியியல் இலக்கியத்திலும் முதுமானிப் பட்டத்தையும் பெற்றார்.

பின்னர் நாடுதிரும்பி இலங்கையிலும் பல்வேறு இடங்களில் சமயப்பணியாற்றினார். பல ஆங்கில, தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டார். உலகத்தமிழர்களை ஒன்றுகூட்டி முதலாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தமிழாராய்சி மகாநாட்டை நடாத்த வழிகோலினார். இவரின் ஒருங்கமைப்பில் ஐந்து உலகத்தமிழாராய்ச்சி மகாநாடுகள் தமிழர்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இடம்பெற்றன. 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும் இந்த மகாநாடு நடைபெற்றது.

இப்படியாக தமிழை வளர்த்த இலங்கைத் தமிழர்களில் அடிகளார் அவர்களே என்றும் முதலிடம்பெறுகின்றார். இலங்கை மட்டுமல்ல தமிழர்கள் வாழும் நாடுகள் அனைத்திலும் அடிகளாரின் தமிழ்ப்பணி என்றும் போற்றப்படுகின்றது. பல மொழிகளைப் பேச, எழுத, வாசிக்கக் கற்றுக்கொண்டதோடு பல மொழிகளில் பல வெளியீடுகளையும் வெளியிட்டு அரும்பணியாற்றினார். அடிகளார் தமிழுக்குச் செய்த தொண்டுகளோ ஆயிரம். இறுதியாக வயது முதிர்ந்த நிலையில் உயிர் நீர்த்தார். பிறந்து இறக்கும்வரை தமிழுக்காகவே தன்னை அர்ப்பணித்த மேதையை தமிழுலகம் என்றும் மறக்காது போற்றும் அடிகளார் என வரலாற்றில் இடம்பிடித்துக்கொண்டார்...

செல்வி. ர நளாயினி
இந்து சிறுவர் அருளகம்
வவுனியா.

## கணக்குப்புதிர் விடைகள்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | + | 5 | - | 7 | =1 |
| + | 0 | + | 0 | + | 0 |
| 4 | - | 1 | + | 5 | =8 |
| - | 0 | - | 0 | + | 0 |
| 5 | + | 2 | - | 6 | +1 |
| =2 | 0 | =4 | 0 | =8 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 469 | − | 289 | = | 180 |
| + | | − | | + |
| 129 | + | 137 | = | 266 |
| 598 | − | 152 | = | 446 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 12

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 8 | 4 | 5 | 2 | 7 | 3 | 9 |
| 3 | 4 | 7 | 6 | 9 | 1 | 2 | 8 | 5 |
| 2 | 9 | 5 | 7 | 8 | 3 | 4 | 6 | 1 |
| 8 | 7 | 2 | 3 | 6 | 9 | 1 | 5 | 4 |
| 6 | 5 | 3 | 1 | 4 | 7 | 9 | 2 | 8 |
| 4 | 1 | 9 | 8 | 2 | 5 | 6 | 7 | 3 |
| 5 | 8 | 6 | 2 | 1 | 4 | 3 | 9 | 7 |
| 9 | 3 | 4 | 5 | 7 | 6 | 8 | 1 | 2 |
| 7 | 2 | 1 | 9 | 3 | 8 | 5 | 4 | 6 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-103

| | | | |
|---|---|---|---|
| வி | டு | மு | றை |
| ட் | நொ | டி | மா |
| ட | ல் | நா | ம் |
| ம் | ப | ப் | அ |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 166

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ட் | டு | ப் | பா | டு | ஆ |
| ர | ச | ட் | டி | ல் | பா | த |
| ச | கோ | ப | ம் | ணி | ண் | அ |
| ம் | ம் | ர | ப | ம் | ப | ப் |
| னா | ட | ந் | ன் | த | ர | ப |
| ரோ | ட் | த | ண் | ணீ | ர் | ம் |
| கொ | ந | ன் | க | ண் | ணீ | ர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்தான்......மதவடி மயிலன்.....



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்... வணக்கம்!...வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க.. கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி..

எனக்கும் கொரோனா என்று கடந்த மாதம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றவங்கள் அங்க பத்துநாள் பரிசோதித்துப் பார்த்துவிட்டு ஒன்றுமில்லை நீ போ என்றதும் நான் ஓடோடி வந்து வீட்டில் படுத்த படுக்கைதான். சத்தியமாக இரண்டு மாதங்கள் கடைத்தெருப் பக்கம் போனதும் இல்லை. பஸ், ட்ராமில், ரெயினில் ஏறியதும் இல்லை பாருங்கோ. வீட்டுக்க சுருண்டு படுத்தது மட்டுமல்ல தினமும் பழைய நாடகங்கள், படங்கள் பார்த்து கண் பழுதாகி இப்ப கண் டொக்டரிடமும் போய்க்காட்டி மருந்து போட்டுக்கொண்டுதான் கிடக்கிறன் பாருங்கோ.

சாப்பாட்டுக்கு எந்தப்பிரச்சனையும் இல்லை நீங்கள் வேண்டி அடுக்கியது போலத்தான் நானும் எல்லாப் பொருட்களையும் வேண்டி அடுக்கியதால தப்பிவிட்டன். அப்ப..அப்ப மரக்கறிதான். என்ர நண்பன் ஒருவன் வேண்டிவந்து கதவில கட்டித்தூக்கிவிட்டுப் போவான். நான் மஞ்சள்தண்ணி தெளித்து வீட்டுக்குள் எடுத்து மீண்டும் மஞ்சள் தண்ணீரால் கழுவிக் காய வைத்து, பிறகுதான் சமையல்.. இது தமிழர் வீடுகளில் நடந்திருக்குமென நினைக்கிறான் இந்த மயிலன்.

சீனானக்காரன்தான் இந்த உலகமெல்லாம் இந்த நோயைப் பரப்பினான் என்று பலரும் பேச, இது யாரால்? எப்போது? எப்படிப் பரவியது என்று இந்த உலகமகா வல்லரசுகளும் கண்டு பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் தங்களுக்க தாங்களே அடிபடுகினம். கொத்து வெட்டு, குற்றம்சாட்டு, யாரில பிழையைப் போடலாம் என்று ஓடோடித்திரியினம். ஆனால் இந்தப் பணக்காரர்களாலோ. ஆதிக்க சக்திகளாலோ கண்டுபிடிக்க முடியாதபடி கண்ணுக்குத்தெரியாத இந்த கோவிட்-19 கிருமி எல்லோர் கண்ணுக்கையும் விரலைவிட்டு ஆட்டி அநியாயம் செய்துகொண்டுதான் இருக்கின்றது பாருங்கோவன்...

இந்த நோயால் உலகமே ஆட்டம்கண்டு கவிண்டு விழுந்துபோய் எழும்பமுடியாமல் தத்தளித்துக்கொண்டுதான் கிடக்குது பாருங்கோ... இந்த நோய் கடந்த டிசம்பரில் தொடங்கி இன்றுவரை ஆறு மாதங்களாக ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கிறது. மனிதன் இப்பூமியில் செய்த அட்டகாசங்கள் கொஞ்சமா?..விஞ்ஞானம் கணனி தொழில்நுட்பம் என்று சொல்லிக் கொண்டு பணம் ஒன்றே குறிக்கோள் என்று வாழ்ந்தபடியால்தான் இந்தக் கேடு வந்து தலையில் விழுந்திருக்கின்றது.

பூமியைத்தோண்டிப் புதையல் எடுத்தும், ஆகாயத்தை ஆக்கிரமித்து வான் மண்டலத்தை ஓட்டையாக்கி, இயற்கைதந்த அருங்கொடைகளான காற்று, ஒளி, சூரிய சக்திக்குக் கேடுவிளைவித்து, அள்ளிக்குடித்து வாழ்ந்த தண்ணீரை அசுத்தமாக்கி, குப்பைகூழம் அணுக்கழிவுகளை நீர் நிலைகளில் கொட்டி உயிரினங்களை அழித்தொழித்து , உலகில் பசி பட்டினியை திட்டமிட்டு வரவழைத்து, சுற்றாடலை அசிங்கப்படுத்தி எத்தனை கேடுகளை விளைவித்தாய் மனிதா?..

நீ திருந்து..அல்லது திருத்துவேன் என்று எல்லோருக்கும் பதிலடி கொடுத்த இந்தக் கண்ணால் தெரியாத கிருமிக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று எனது நண்பன் ஒருநாள் சொன்னதில் எவ்வளவு உண்மை இருக்குது என்று இப்ப இந்த மயிலனும் புரிந்துகொண்டு உயிர் தப்புவதற்காக ஒரு நாளைக்குப் பதினைந்து இருபது தடவை உங்களைப் போல சவுக்காரம் போட்டு கை கழுவும் பழக்கம் எங்கிருந்து வந்தது. ஒருக்கா நீங்களும் கொஞ்சம் சிந்தியுங்கோ...

இந்த சம்பவத்தைப் பார்க்கும்போது இந்தக் கொரோனாவைப் போல இன்னும் பல கிருமிகள் இன்னும் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கின்றனர். இந்த நோய் வந்ததால நம்மட ஆட்களும் எவ்வளவோ திருந்திவிட்டினம் என்று சொல்ல மாட்டன். கொஞ்சம் பொறுங்கோ.. திருவிழா, கலியாணம், சாமத்தியவீடு, வீடுகுடிபுகிர்தல், பிறந்தநாள், 50ம் 60ம் கலியாணநாள், வெளியீட்டு விழா, சினிமா அது இது என்று ஒவ்வொருவிழாவுக்கும் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிப் பழையபடி தொடங்குவார்கள். காசைக் கரியாக்குவார்கள். காசை அள்ளிக்கொட்டி தங்கட கெளரவம் பணக்காரத் திமிரைக் காட்டுவார்கள்.

போதாக்குறைக்கு கோவில் திருவிழாக்களையும் ஆடம்பரமாய் போட்டிக்குச் செய்து, மில்லியன் கணக்கான பணத்தை விரயமாக்கு வார்கள். கோடிக் கணக்கான தேங்காய்களைத் தெருவெல்லாம் அடித்துடைத்து அசிங்கப்படுத்தி வெளி நாட்டவர்களிடம் வெறுப் பையும் சம்பாதிப்பர். இதுதான் காலாதி காலம் மூத்த தமிழ்குடி என்று நம்மளுக்க நாமே சொல்லிக்கொண்டு டமிழர் செய்யும் திருக்கூத்துகளுக்கு இந்தக் கிருமி தக்க பதிலடி கொடுத்திருப்பதை இந்தத் தங்கத்தமிழன் உணருவானா?..

இந்த முடக்க காலத்தில்கூட பட்ட கஸ்டங்களை ஒருக்கா திரும்பிப்பார்க்க வேணும் பாருங்கோ. தந்தை, தாயைப் பார்க்க முடியாமல் துன்புற்ற பெற்ற பிள்ளைகள், பேரக்குஞ்சுகள். ஏன் கணவன் மனைவி கூட ஒன்றாய் வாழமுடியாத சூழ்நிலைகள், உற்றார், உறவுகள் நண்பர்களுடன் அளவளாவி ஒன்றுகூடமுடியாத நிலமைகள், விரும்பிய உணவை விரும்பிய நேரம் வேண்டி உண்டு வாழமுடியாத நிலை என இப்படி எத்தனை துன்பதுயரங்களைக் கண்டுகொண்டோம். இவை என்னும் தேவையா நமக்கு.

அநியாயங்கள் வேண்டாம். பேதங்கள், பூசல்கள் போட்டிகள் வேண்டாம். ஆதிக்கம், வெறி, திமிர் வேண்டாம். எல்லோரும் மனித நேயத்துடன் நாம் வாழும் இப்பூமிப்பந்தை பாதுகாத்து, இயற்கையோடு ஒத்து வாழ்வோம். இல்லை என்றால் இன்னும்..இன்னும் கொடுமைகளைத் தான் சந்திக்க வேண்டிவரும் என இந்த மயிலன் கூறவில்லை. இயற்கை தெட்டத்தெளிவாக எடுத்துரைக்கின்றது..... இன்னும் எழுதலாம்.. கனக்க எழுதினால் மயிலனுக்கு மண்டையில ஒண்டும் இல்லை என்றும் சிலர் நினைப்பீர்கள். எப்படி என்றாலும் நினையுங்கோ...நான் மீண்டும் வருவேன்.. அப்ப வாறன்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொறோனாவைரசும் நவீனமுறை வாழ்க்கையும்...

தற்போது வந்துள்ள கொடிய நோய் கொறோனா வைரஸ் பல விஷயங்களை புரிய வைத்து இருக்கிறது நான் புரிந்து கொண்டதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில்தான் வாழ்கை இந்த வாழ்க்கையை வாழ்வதற்கு எத்தனை விதமான பிரச்னையை எதிர் கொள்ளவேண்டி இருக்கு துரோகம், பழிவாங்கல், பொறாமை இப்படி பல. இப்படி செய்பவர்களுக்கு புரிவதில்லை அவர்கள் செய்யும் துரோகங்கள் பல மடங்காய் குறுகிய காலத்திற்குள் கடவுள் திருபம்பவும் அவர்களுக்குக் கொடுப்பார் என்று. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.

ஏன் இவர்கள் அநியாயத்துக்கு துணை போகிறார்கள் என்று யோசித்தால் ஒரே ஒரு பதில்தான் பணம் இன்றைய விஞ்ஞான உலகம் வாழ்க்கையை வாழ்வதற்கு பல தேவைகளை உருவாக்கி இருக்கிறது முழு தேவைகளையும் பூர்த்தி செய்ய வேணும் என்றால் நிறைய பணம் தேவை அதற்கு குறுக்கு வழியில் பணம் சேகரித்து தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யப் பார்க்கிறார்கள். இந்த ஒரு நோக்கம்தான் அவர்களை சக மனிதர்களுக்கு அநியாயம் செய்ய ஊக்குவிக்குது.

பிறக்கும்போது ஒன்றும் கொண்டு வருவதில்லை போகும் போதும் ஒன்றும் கொண்டு போவதில்லை. புலம்பெயர் நாடுகளில் 30, 40 வருடங்களாக வாழ்ந்து வருகிறோம் நாங்கள் தான் முதலாவது தலைமுறை அடுத்த தலைமுறை வளர்ந்து கொண்டு இருக்கிறார்கள் அவர்களுக்கு தாய்மொழி தமிழ் கலாச்சாரம் வரலாறு சொல்லி கொடுப்பது எங்கள் கடமை ஆனால் சிலபேர் வெளிநாட்டில் பிறந்த பிள்ளைகளுக்கு மொழி கலாச்சாரம் வரலாறு தமிழ் உணவு தெரியாமல் வளர்த்து வருகிறார்கள்.

அவர்களுக்கு தற்போது புரியும் தமிழ் உணவில் மருத்துவம் இருக்கிறது என்பது. கொறோனா வைரஸ் ஆரம்பித்து 6 மாதம் கடந்து விட்டது இன்னும் மருந்து கண்டு பிடிக்கவில்லை இன்றைய விஞ்ஞான உலகம் அசுர வளர்ச்சி அடைந்துள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் நாங்கள் பலம் கொண்டவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாடுகள் யாராலும் தீர்வு கிடைக்கவில்லை ஆனால் தமிழ் உணவு மூலம் வராமல் தடுக்க முடியும் அது தான் தமிழ் உணவின் மகிமை.

மொழி கலாச்சாரம் பண்பாடு சமயம் வரலாறு தலைமுறை எவ்வளவு முக்கியம் என்பதை அடுத்த தலைமுறைக்கு சொல்லி கொடுப்போம். உலகத்தில் எதையும் விலை கொடுத்து வேண்டிடலாம் அன்பைத்தவிர அன்புதான் என்றைக்கும் நிஜம்.

எங்களைத் தனிமை படுத்தி பாதுகாப்பாய் இருக்கிறோம் எங்களுக்கு வருத்தம் வந்தால் மருத்து மனைக்கும் போகமுடியாது அன்பனாவர்கள் இருந்தால்தான் எங்களுக்கு உதவி செய்து பாதுகாத்து கொள்வார்கள்.

அன்பு என்றைக்கும் பலம். வாழ்கை ஒருமுறைதான் யாருக்கும் தீங்கு செய்யாமல் வருமானத்தில் தேவைகளை பூர்த்தி செய்து முடிந்த உதவி செய்து வாழ்வதுதான் சிறந்த வாழ்கை. நல்லதை நினைப்போம் நல்லதை செய்வோம் கடவுள் என்றைக்கும் துணை நிற்பார். நன்றி!... அன்பே சிவம்!...

## ஐயுணர்வு....

தோலின் மூலம் தொடும் உணர்வையும்

நாவின் மூலம் தொடும் சுவை உணர்வையும்

மூக்கின் மூலம் தொடும் வாசனை உணர்வையும்

கண்கள் மூலம் பார்க்கும் உணர்வையும்

காதுகள் மூலம் கேட்கும் உணர்வையும்

உணர்ந்து கொள்வது ஐயுணர்வு என்று சொல்லப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு நிலவரம்....

(கலைவாணி. ஏகானந்தராஜா)

இந்த ஆண்டு நாம் தாயகம் போகும் போது நாட்டின் நிலமை வேறாகவும் திரும்பி வரும்போது நிலமை வேறாகவும் இருந்தது. காரணம் கொறோனா தொற்று. போகும்போது முருகண்டியில் ஒரு சுவார்ஷ்யமான நிகழ்வு. வானிலிருந்து இறங்கி கால் கை கழுவிவிட்டு கோவில் நோக்கி நடந்தேன். அப்போ 50 வயது மதிக்கக்கூடிய ஒரு பெண்மணி என்னை நோக்கி அம்மா ஏதாவது பணம் கொடுங்கள் இந்த காலில் சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்று காண்பித்தார். நான் என்கையிலிருந்த பணத்தை கொடுத்தேன்

வழமையாகவே நாம் கோவியில் ஒரு கற்பூரத்தை கொழுத்தி விட்டு அங்கு நிற்கும் வறியவர்களுக்கு பணம் கொடுப்போம். அப்போ அந்த பெண்மணி இது போதாது வெளிநாட்டு பணம் இருந்தால் கொடுங்கம்மா என்று கூறியதுடன் தனது பெட்டியை திறந்து காட்டினார். அதில் பல யூரோக்களும் பவுண்ட்ஸ்சுமாக காணப்பட்டன. நான் என் கணவரிடம் யூரோ வாங்குவதற்காக கடையடிக்குத் திரும்பினேன். அந்த பெண்மணி "அம்மா ஒரு நல்ல சேலையும் தந்திட்டு போங்கள்" என்றார். நான் திரும்பி வரும்போது தருகிறேன் என்றேன். உடனே அப்பெண்மணி அம்மா வானில் வெளிநாட்டுச் சொக்லேட் வைத்திருந்தால் தாங்கம்மா என்றார். நான் திகைத்துவிட்டேன்.

எப்படி நாம் வெளிநாட்டில் இருந்து வந்திருப்பதை அறிந்தாரோ? மிகச் சாதுர்யமான பெண்ணாக இருக்கிறாளே என்று என் கணவரிடம் கடையில் கூறினேன். அப்போது தான் கடைக்காறர் கூறினார். அந்த பெண்ணின் பிள்ளைகள் வெளிநாடுகளில் இருப்பதாகவும் அவர் இதை தொழிலாக வைத்திருப்பதாகவும் பல தடவைகள் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் வந்து அவரை வெளியேற்றியதாகவும் இங்கு வந்திருக்கக்கூடாது என்று எச்சரிக்கை செய்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

என் வாழ்கையில் வெளிநாட்டு சொக்லேட் கேட்ட பிச்சைக்காறியை முதல் தடவையாக கண்டு அதிசயித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமைபோல ஊரில் செய்யவேண்டிய கடமைகளாக வறியவர்களை தேடிச்சென்று உதவினோம். அந்த வேளையில்தான் கொறோனா தொற்று நோய் பரவத்தொடங்கியது. நாம் யாழ்ப்பாணத்தில் நின்றதால் அபாயம் எதுவும் இருக்கவில்லை. ஆமி பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கண்ணிய மாகவே எடுத்துச்சொல்லி மக்களை பாதுகாத்தார்கள். கிராமப்புறங்களில் ஊரடங்கு நேரம் எந்த பாதிப்பையும் தரவில்லை. காரணம் கிராமங்களில் உள்ள சிறிய கடைகளில் பொருட்கள் வாங்கக்கூடியதாக இருந்தது.

காலையிலும் மாலையிலும் பாண் வாகனம் வீட்டு வாசலுக்கே வரும். கடலுணவுகளும் அப்படியே. மரக்கறிக்கு பஞ்சமே இல்லை. தோட்டம் செய்பவர்கள் ஒருவர்கொருவர் கொடுத்தும் மாறியும் கொள்வதால் சகல மரக்கறிவகைகளும் பெறக்கூடியதாக இருந்தன. பழவகைகளும் அப்படியே. இந்த நேரத்தில் ஒருவர்கொருவர் உதவும் ஒற்றுமை என்கிற பழக்கவழக்கமும் ஜாதி மத பேதமற்ற ஒற்றுமையையும் காணக்கூடியதாக இருந்தது உண்மை.
மதுக்கடைகள் திறக்கவில்லை எமது பெருங்குடி மக்கள் ஒழுங்காக வீட்டில் இருந்ததையும் பார்த்து அதிசயித்தேன். இளந்தாரிப் பையன்கள் சினிமா தியேட்டர்கள் மூடி இருந்தமையால் வீதிகளில் திரியாமல் வீடுகளில் இருந்து அக்கம் பக்கத்தவர்கள் சேர்ந்து வீட்டில் வீடியோ படம் பார்ப்பார்கள். வாள்வெட்டுப் பிரச்சனைகளோ களவுப் பிரச்சனைகளோ நாம் அங்கு நின்றவரை நிகழவில்லை. கோவில்கள் பூட்டி இருந்தாலும் மக்கள் வெளியே நின்று பூ வைத்து கும்பிடுவதை பார்த்தேன: சந்தைகள் கட்டிடத்துள் கூடவில்லை .வீதிக் கரையோரங்களில் ஆங்காங்கே மரக்கறிகள் பழங்கள் முட்டை போன்றவற்றை விற்பனை செய்தனர்.

கடலுணவு விற்பவர் ஆங்காங்கே விலகி இருந்ததால் மீன் நெடில் இருக்கவில்லை. சந்தைக்குள் மீன் விற்கும் இடத்தை விட வெட்டிக்கொடுப்பவரிடம் நீண்ட கியூ நிற்கும். வீதியில் அப்படி நிற்கவும் முடியாது. வெட்டிக்கொடுப்பவரும் இல்லை. ஒட்டுமொத்தமாக பார்த்தால் எமது மக்களின் அதி உயர்ந்த சௌகரியங்களும் பணச்செருக்கும் கொறோனாவால் அழிக்கப்பட்டுவிட்டது எனலாம். கொறோனாவால் எமது பாரம்பரிய கலாச்சாரங்களும் மீண்டும் தலைதூக்கியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் வீட்டுக்குப் போனால் முற்றத்திலேயே கை கால் அலம்பிவிட்டு வெளிக்கட்டுகளில் காற்றாட இருந்து கதைப்பதையும் மரணவீட்டுக்கோ வைத்தியசாலைக்கோ சென்றுவந்தால் நேராக கிணற்றடிக்குச் சென்று குளித்து உடைமாற்றும் வழக்கத்தையும் பழையகுருடி கதவைத்திறவடி என்று மீண்டும் எமது மக்கள் பின்பற்றத்தொடங்கிவிட்டனர்.

வேப்பிலை, ஊதுவர்த்தி புகைப்போடுவதும் வீட்டு வாசல்களில் வேப்பிலை, மாவிலை கடடுதலும் வீட்டுக்கு மஞ்சள்த்தண்ணி தெளித்தலும் கிருமிநாசினியை தொலைக்கும் என்பதை தெரிந்திருந்தும் செய்யத் தவறியவர்கள் தற்போது அனேகமாக இவற்றை பின்பற்றுவதையும் காணக்கூடியதாக இருந்தது. இவை மட்டுமல்ல உணவுப பழக்கவளக்கமும் கூட மாற்றமடையும் நிலை மீண்டும். கடைச் சாப்பாட்டையே நம்பியிருந்த எம்மவர் தற்போது வீட்டுச்சமையலும் தோசை இட்டலி என சாப்பிடுகிறார்கள். வேகுவிரைவில் பழஞ்சோற்றின் மகிமையையும் புரிந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்த இதழில் தொடரும்........


# இனவெறித்தாக்குதல்கள்

அமெரிக்காவில் அண்மைக்காலமாக இனவெறித்தாக்குதல்கள் அதிகரித்துவருவதாகத் தெரியவருகின்றது. இச்சம்பவங்கள் இன்று நேற்றல்ல சுமார் ஐந்நூறு வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுவருகின்றன. கடந்த சில ஆண்டுகளில் இடம் பெற்ற கொலை வெறித்தாக்குதல்களில் பொலிசாரின் தாக்குதலால் பலியானோரின் எண்ணிக்கைகளைப் பார்ப்போம்...

| ஆண்டு | மொத்தம் | கறுப்பினத்தவர்கள் |
|---|---|---|
| 2013 | 1.111 | 291 |
| 2014 | 1059 | 277 |
| 2015 | 1.103 | 305 |
| 2016 | 1.071 | 279 |
| 2017 | 1.095 | 276 |
| 2018 | 1.143 | 256 |
| 2019 | 1.099 | 258 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்- 27.03.1892 மறைவு- 19.07.1947

# சுவாமி விபுலானந்தரும் இசையும்

(கலைவாணி. ஏகானந்தராஜா)

சுவாமிகள் தனது முப்பதாவது வயதில் (1922ல்) தமிழ் இலக்கியங்களிலும் பிற மொழிகளிலும் இசை பற்றிய கருத்துக்களை சொல்லத்தொடங்கினார்.மதுரை தமிழ்சங்க மாத இதழ் வெளியீடான "செந்தமிழ்' பத்திரிகையில் தொடராக நாடகத்தமிழ் பற்றி எழுதிவந்தார். அதில் ஏழ ஸ்வரங்களின் தமிழிசைப் பெயர்களையும் அச்சுரங்களின் மாத்திரை அளவுகளையும் நால்வகை நிலங்களுக்குமுரிய யாழ் வகைகளையும் பண்வகைகளையும் தாளவகைகளையும் பற்றிய கருத்துக்களை எழுதினார். மேலும் இசை நரம்பியலில் கிளை, பகை, நட்பு முறையில் உள்ள நரம்பின் பிறப்பியல்புகளையும், நரம்பியல் வாத்தியங்களை வாசிக்கும் நெறிகளையும் தவிர்க்கவேண்டியவைகளையும் பற்றி சிறப்பாக விளக்கியுள்ளார்.

பாணரின் உயர்ச்சிக்கும் புகழுக்கும் உதவிய கலைச்சின்னமான யாழ் பழந்தமிழரது தெய்வீக கலைக்குச் சான்று பகர்ந்திருந்தது. அப்படிப்பட்ட யாழ் அழியும் காட்சியைக்கண்டு வேதனையுற்றார். மன்னர் காலத்தில் இசை விற்பன்னர்கள் மன்னரால் முன்னிலைப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். மன்னர் ஆட்சி மாற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழர் கையாண்ட பெரியாழ், சிறியாழ், வீரியயாழ், செங்கோட்டுயாழ் பற்றி ஆதாரங்களுடன் கூறியுள்ளார். இவரது கருத்தின்படி 1931 ம் ஆண்டின் பின்னரே இவரது யாழ் பற்றிய ஆராய்ச்சி சிறப்புற்றது எனலாம். Calcutta Review December 1941 இதழில் பழந்தமிழ் நில யாழ்களும் இந்திய சங்கீதத்தின் இருபத்திரண்டு சுருதிகளும் பற்றியே கட்டுரையில் எழுதியுள்ளார்.

விபுலானந்த அடிகளார் மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் கவிதைகளால் மிகவும் கவரப்பட்டவர். மக்கள் கவிஞன் பாரதியின் கவிதைகள் இலக்கண இலக்கிய வரம்பிற்குள் அமையாதன என்று ஒருசாரார் ஏற்றுக்கொள்ளாத போதிலும் இசை வித்வான்களை வைத்து 1931 ல் பாரதிசங்கம் அமைத்து பாரதியின் கவிதைகளை இசையமைப்பித்து மேடைகளில் பாடவைத்த பெருமை அடிகளாரையே சாரும்.

1933 ம் ஆண்டு கல்லடி சிவானந்த வித்யாலயத்தில் அனாதை சிறார்கள் மத்தியில் ஒரு உருத்திரவீணையை பட்டுக்கம்பளத்தின்மீது வைத்து வீணையின் மகிமையையும் இனிமையையும் பற்றி கூறியதுடன் தனக்கு இசைமீதுள்ள ஆர்வத்தைக்கூறி தன் குரல்வளம் சரியில்லாத காரணத்தால் தன்னால் பாட முடியவில்லை என்பதையும் அதனால் வீணை வாத்தியத்தை தான் மீட்டுவதாகவும் கூறினார் . இதிலிருந்து அடிகளாரின் இசை ஆர்வத்தையும் ஆராய்ச்சியையும் ஒரே சமயத்தில் அறியமுடிகிறது.

1941 ம் ஆண்டில் தமிழ் நாட்டில் "தமிழிசை இயக்கம்" ஆரம்பிக்கப்பட்டதே தமிழரிடையே தமிழிசை பற்றிய விழிப்புணர்வுக்கு தூண்டுகோலானது. அக்காலத்தில் பாபநாசம்சிவன், யோகி சுத்தானந்த பாரதி போன்ற பல பெரியார்களின் நாற்றுக்கணக்கான பாடல்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இசையமைத்து தொகுத்து வெளியிட்டது. இவற்றை ஆய்வு செய்யும் பொறுப்பை ஏற்று அடிகளார் மிகுந்த பாராட்டைப் பெற்றார்.

1941 ஆம் ஆண்டிலிருந்து 1944 ம் ஆண்டுவரை தொடர்ந்து மதுரை தமிழ்சங்கத்தினரால் வெளியிடப்படும் மாத இதழான "செந்தமிழ்" பத்திரிகையில் இசை சத்பந்தமான பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இசைக்கிரமம், வங்கியம், சங்கீத மகரந்தம், சங்கீத பாரிஜாதம், நட்டபாடையில் எட்டுக்கட்டளைகள், பாரிஜாத வீணை, இசைத்தமிழ் குறிப்பு போன்ற கட்டுரைகளும் கரந்தை தமிழ் சங்க மாத இதழான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ்ப் பொழில்" பத்திரிகையில் நீரர மகளிர் இன்னிசைப்பாடல், பண்ணும் திறனும், குழலும் யாழும், எண்ணும் இசையும், சுரதிவீணை, பாலைத்திரிபு, இயல்இசை நாடகம் போன்ற இசைக் கட்டுரைகளையும் இன்னம் பல இசைக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அத்துடன் பல பாடல்களையும் எழுதியுள்ளார்.

சிறு வயதிலேயே பாடுமீன்களின் இன்னிசையை பருகிய அடிகளார் இசைநுட்பத்தை பூரணமாக அறியும் பொருட்டாகவோ அல்லது சிலம்பிசையை கற்கப்புகுந்ததினாலோ இலக்கியக் கண்கொண்டு இசையறிவைப் பெற்றிருக்கிறார். இசையும் சமய மார்க்கமும் எளிதானவையன்று என்பதை அடிகளாரின் கவிதை வரிகள் உணர்த்திநிற்கின்றன.

தோற்றும் சரிபமபதநி சுரமென்றுரைத்தலெளிதாகும்
ஏற்றகருவிதனிலிவற்றை இசைத்தல் எளிதன்று
மாற்றமின்றிச் சமயநெறி வகுத்தமரபுதனை வாயாற்
சாற்றலெளிது பின்னிவற்றை சார்ந்து நிற்றல் அரிதாமே.....

---

## சபாரத்தினம் மாஸ்ரர் மறைந்தார்....

ஊர்காவற்றுறை கரம்பனைப் பிறப்பிடமாகக்கொண்ட மூதறிஞர், ஆ.சபாரத்தினம் ஆசிரியர் (காவல் நகரோன்) மே மாதம் 1ந் திகதி இறந்தார். இவருக்கு 91 வயது. 1949 - 1950 ஆம் ஆண்டுகளில், மஹரகம ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்ற இவர், 33 ஆண்டுகள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் 5 ஆண்டுகள் கரம்பன் சண்முகநாத வித்தியாலயத்தில் அதிபராகவும் பணியாற்றி 1988 இல் ஒய்வு பெற்றுள்ளார். ஆசிரியத் தொழில் மட்டுமன்றி, சிறந்த சமூக சேவையாளராகவும் தமிழ் கலை, இலக்கிய துறையிலும் காவலூர் இலக்கிய வட்டம் அமைப்பின் தலைவராகவும் இருந்தார். அன்னாருக்கு மண் சஞ்சிகை அஞ்சலியைத் தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த மாமேதை கலாநிதி. எம்.ஏ.எம்.சுக்ரி...

பன்னூலாசிரியர் - கலாபூஷணம் MMM. மஹ்ரூப் கரீம் - MA



அல்லாஹ்வின் அருளும், அறிவாற்றலும் மிக்க ஆசிரியப் பெருந்தகை, ஆற்றல் மிக்க அறிஞர், ஈகை திறனும் மிக்கவர், உண்மை நேர்மைக்கு உதாரணமானவர், ஊக்கமாய் ஆக்கமாய் அரும்பணி செய்தவர், எல்லோர் மனதையும் எழிலாக கவர்பவர், ஐக்கியமாய் அனைவருடனும் அன்பினால் இணைப்பவர், ஒருவரையும் ஒறுக்காது ஒற்றுமையாய் வளர்த்தவர், ஓதும் வேத வாக்கு ஏற்ப ஒழுங்காக வாழ்ந்தவர், ஔடதமான அருமருந்தாக அறப்பணி செய்து ஆயிரமாயிரம் மாணவர்களின் அறிவுப் பசியை தீர்த்தவர் - இவர் இம்மண்ணை விட்டு 19-05-2020ல் மறைந்தாலும் அவரால் உருவாக்கப்பட்ட மாணவர் சமுதாயத்தால் அவர் அறிவும், கருத்தும் அகிலம் முழுதும் பரவும். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அறிவுப் பணியையும், சமூக மாற்ற போராட்டத்தையும் தனது மாணவர்களுக்கு அறிவாகவும் ஆய்வுக் கட்டுரைகள் மூலமும் தமது சிந்தனை தெளிவின் மூலமும் தம்மிடம் தனது கருத்துக்களை விமர்சித்து கூறுபவர்களுக்கும் சிரித்த முகத்துடனும், சினமடையா உயர் குணத்துடனும் இலாவகமாகப் பேசி இனிமையாக விளக்கும் ஆற்றல் வாய்ந்த ஆழ்ந்த புலமை வாய்ந்த அறிஞர் கலாநிதி. சுக்ரி அவர்கள் என்றால் மிகை ஆகாது.

1940ல் மாத்தறையில் பிறந்து பிரசித்தி பெற்ற கல்லூரிகளில் கற்று பேராதனை பல்கலைக்கழகத்தில் அரபு மொழியை, இஸ்லாமிய கலாசார, நாகரீக விழுமியங்களை சிறப்பாகக் கற்ற இவரின் ஆளுமை, தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று பாஷைகளிலும் பாண்டித்தியம் பெற்ற பேச்சாளராக, எழுத்தாளராக இவர் இருந்தார் என்பது மறக்க முடியாத உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மாநாடுகள் பலவற்றில்கலந்து கொண்டு இவர் சமர்ப்பித்த ஆராய்ச்சிக்கட்டுரைகள் சர்வதேச அரங்கிலும், அரபு இஸ்லாமிய உலகிலும் பெரும் மதிப்பைப் பெற்றன. இஸ்லாமிய கல்வித்துறை சம்பந்தமாக ஆங்கிலத்திலும், தமிழிலும் 18 நூல்களை எமக்குத் தந்துள்ளார். சகல இன மக்களாலும் எமது நாட்டின் முக்கிய புத்திஜீவிகளில் ஒருவராகும். அவரது அறிவுத்திறமை, மொழிப்புலமை, சகல இன மக்களோடும் பழகும் பண்பு ஆகியவற்றால் கலாநிதி சுக்ரி அவர்கள் இலங்கையின் தேசிய புலமைச் சொத்தாக மதிக்கப்பட்டார்.

நாட்டின் பல்வேறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவற்றில் முக்கிய பதவிகளை வகித்த இவர், பல சபைகளில் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் விளங்கினார். இலங்கை தேசிய நூலக சபை, ஆவணவாக்க சேவை சபை, இலங்கை சாகித்திய மண்டல சபை, யுனெஸ்கோ, இலங்கை தேசிய சபை போன்ற 20க்கும் மேற்பட்ட பல்வேறு நிறுவனங்களில் உறுப்பினராக இணைந்து தமது பங்களிப்பை சிறப்பாகச் செய்த சேவை மூலம் தமது முஸ்லீம் சமூகத்துக்கு அவர் தேடித் தந்த பெருமை சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததாகும்.

தான் ஒரு கலாநிதியாக இருந்தாலும் சாமானிய மக்களைப்போல் பெருமை, அகம்பாவம், அறிவுச்செருக்கு ஆகியவை அறவே இன்றி பணிவும், அடக்கமும் கொண்ட அறிவுப்பெட்டகமாக திகழ்ந்தார் என்பதை அவரது வாழ்க்கை வரலாற்றில் இருந்து நாம் அறிய முடிகிறது. எப்போதும் சிரித்த முகத்துடனும், எளிமையான சொற் பிரயோகத்துடன் உறவாடும், உயரிய பண்பும் கொண்ட இவர் இலங்கையிலுள்ள பிரச்சினைகளுக்குரிய எந்தவொரு கட்சி இயக்கத்தையும் சாராது, தனித்து நின்று செயலாற்றிய ஒரு செயல் வீரர் இவர் என்றால் அது மிகையாகாது.

இலங்கை முஸ்லிம்களின் விரல்விட்டு எண்ணக்கூடிய அறிஞர்களில் ஒருவரான இவரின் இழப்பு இவரது பல்வேறு துறைகளிலும் ஆற்றிய பணிக்கு ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரப்ப அல்லாஹ் அருள்புரிவானாக. அன்னார் இஸ்லாத்திற்கும், இஸ்லாமிய கல்விப்பணிக்கும், சமூக, கல்விச்சேவைகளுக்கும் ஆற்றிய பணிக்கு மறுமைப்பாக்கியங்களை அல்லாஹ் நிறைவாக அளிப்பானாக. ஆமீன் யாரப்பல் ஆலமீன்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக வரலாற்றில் என்றும் அழியாத நாமம்....



**ஆறுமுகன் தொண்டமான்**
**(29-05-1964 - 26-05-2020)**

சௌம்யமூர்த்தி ஆறுமுகன் ராமநாதன் தொண்டமான் அல்லது ஆறுமுகன் தொண்டமான் (Savumiamoorthy Arumugan Ramanathan Thondaman) தனது 55வது வயதில் கொழும்பில் மாரடைப்பால் காலமானார். இலங்கைத் தொழிலாளர் சங்கத் தலைவரான இவர் இலங்கையின் மலையகத் தமிழ் அரசியல்வாதியும், தொழிற்சங்கத் தலைவரும் ஆவர். கொழும்பு றோயல் கல்லூரியில் படித்த இவர் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சரும் ஆவார். இவர் முன்னாள் அமைச்சரும் தொழிற் சங்கவாதியுமான சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரன் ஆவார்.

இவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் இறக்கும் வரை பதவியில் இருந்தார. இவர் 2020 மே 26 இரவு தனது இல்லத்தில் மாரடைப்பால் காலமானார். இவர் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை பொதுசன முன்னணியின் சார்பில் போட்டியிடவிருந்தார். இவரின் இடத்திற்கு இவரது மகன் நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரனார் சௌயமூர்த்தி தொண்டமானுக்குப்பின்பு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். (16-8-1994 தொடக்கம் 02-03-2020 வரை) இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகித்த இவர் மலையக மக்களின் மேம்பாட்டுக்காக உழைத்த பெரும் தலைவராகக் கருதப்படுகிறார்.

தோட்டத்தொழிலாளர்களின் கல்வி, பொருளாதாரம், உரிமை போராட்டங்களில் ஜனநாயக வழியில் போராடி வெற்றிபெற்று அந்த மக்களின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு உழைத்தவராவர். இதனால் மலையக மக்களின் விடிவெள்ளியாகவும் கருதப்பட்டார். தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்களின் நன்மதிப்பைப்பெற்ற இவர் தமிழர்- சிங்களவர் இன ஒற்றுமைக்காகவும் பாடுபட்டு உழைத்து அனைத்து மக்களின் நன் மதிப்புக்குரியவராகத் திகழ்ந்தார்.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இ.தொ.கா. எடுத்த முயற்சிகளின் பலனாகவே மலையக இளைஞர், யுவதிகள் அரசதுறை தொழில் வாய்ப்புகளில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு ஆசிரியர் நியமனங்கள், தபால் சேவை ஊழியர்கள், தொடர்பாடல் உத்தியோகத்தர்கள், மற்றும் மலையகத்தின் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச திணைக்களங்களில் அரசாங்கம் தொழில் வாய்ப்பினை வாரி வழங்கியமைக்கு இ.தொ.கா.வே பின்னணியில் நின்றது.

இதன் மூலம் ஒரு வட்டத்திற்குள் வாழ்ந்த மலையக இளைஞர், யுவதிகள் தேசிய நீரோட்டத்திற்குள் இணைக்கப்பட்டது மாத்திரமின்றி மலையகத்தில் இந்த நியமனங்கள் கல்வித்துறையிலும் வரலாற்று திருப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. மலையகத்தில் வளமான எதிர்காலம் நோக்கிய பயணத்திற்கு இ.தொ.கா.வின் அச்சாணியாக விளங்கியவர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான்.

மலையக மக்கள் மத்தியில் போற்றப்படும் தலைவராக மக்களின்மனங்களை வெற்றி கொண்ட இவரின் இறுதிக் கிரிகைகள் 31-05-2020 அன்று அவரது சொந்த ஊரில் பெருந்திரளான மக்கள் புடைசூழ கண்ணீர் வெள்ளத்துடன் விடைபெற்றார். பேரானார் தொண்டமானைப்போல இலங்கையில் சரித்திர புருசராக விடைபெற்றார். அன்னாரின் பணிக்காக நாமும் அஞ்சலி செலுத்துவோம்!..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா........

(கெங்கா ஸ்ரான்லி)

வந்தாலும் வந்ததுகொரோனா. மக்களுடைய வாழ்வியலைப் பிரட்டிப்போட்டது. எப்படி ஓடிக்கொண்டிருந்த வாழ்க்கை திடீரென்று தடம்புரண்டு நிலை தடுமாறிவிட்டது. எப்படியெப்படி என்றா? பாடசாலைகள். தொழிற்சாலைகள், அங்காடிகள் அத்தனையும் ஸ்தம்பித்து நின்றன "நான் அசைந்தால் அசையும் உலகே" என்று சிவனின் கூற்றுக்கிணங்கப் போலும். கொரோனா என்றதும் உலகே அத்தமித்து விட்டதுபோல. லொக்டவுன் என்றதும் மக்கள் பயந்து உணவுப்பொருட்களை வாங்கி வைத்தனர் ஆரம்பத்தில். ஆனால் அரசாங்கம் உணவுப்பொருட்கள் அங்காடியைத் தடைசெய்யவில்லை. இருந்தும் சாமான்கள் தட்டுப்பாடாகவே இருந்தன.

மக்கள் வெளியில் நடமாடவே அஞ்சினர்.அத்துடன் அரசாங்கமும் இருவருக்குமேல் இணைந்து சென்றால் தண்டப்பணம் அறவிட்டார்கள். குழக்களாக குழவிழாக்கள், பொதுஇடங்களிலும். வீடுகளிலும் ஒன்றுகூடுவதைத் தடை விதித்தார்கள் இதை மீறியவர்களுக்குத் தண்டனையாக 250 யூரோமுதல் 25.000 யூரோ அறவிட்டார்கள். நாங்கள்வாழும் ஜேர்மனியில் இந்தச்சட்டங்களை முறையாகக் கடைப்பிடித்தனர். உலகில் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஜெர்மனியில் கொரோனாவின் தாக்கம் வெகுகுறைவாவே இருக்கிறது.

ஆனால் சிலநாடுகள். ஊரடங்குச்சட்டம் போட்டு மக்களைக் கட்டுப்படுத்தியது. இதனால் மக்கள் பல கஷ்டத்திற் குள்ளாகினர். மன அழுத்தம். குடும்பத்திற்குள் சண்டைகள், எனப்பிரச்சனைகள் கூடின. இது மேற்கத்தியநாடுகளில் என்றால் வறுமைக்கோட்டிற்குள் உள்ள நாடுகளில் பசி,பட்டினி ,உணவு இன்மை என்று பலகஷ்டங்களை அனுபவித்திருகிறார்கள். அன்றாட நாட்கூலி வேலை செய்யும் பலர் திடீரென்ற இந்தச் சட்டத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எத்தனையோ சமூக உதவிநிறுவனங்கள்,குழக்கள்,கோவில்கள்,பூசாரிகள். அவர்களுக்கு உதவிகளைச் செய்திருகிறார்கள். அந்தஉதவிகளை முறையாகவும், நிறைவாகவும் செய்ய முடியவில்லை.. வியாபாரிகளும் பொருட்களின் விலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றி விற்றால் ஏற்கனவே நலிந்த ஏழைமக்கள் என்ன செய்வர்.. வெளிநாட்டில் உறவினர்கள் உள்ளவர்கள் இந்தநேரம் உதவிகள் செய்திருகிறார்கள். அப்படி இல்லாதவர்கள் நிலை பெரும்பாடுதான். ஆனாலும் உதவிகள் பலர் பலவழிகளில் நிறையவே செய்துள்ளார்கள்

நல்ல இறுக்கத்தில் இருந்த கொரோனா வைரஸின் தாக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது பெண்களின் தலைமைத் துவம் உள்ள நாடுகளில் தாக்கம் குறைவு என்ற செய்தியும் வெளியாகியது.. மக்கள் அரசாங்க கட்டளைகளைக் கடைப்பிடித்தனர்..இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் அரசாங்க கட்டளைகளைக் கடைபிடிக்காது அதிகாரிகளால் அவஸ்தைப்பட்டனர். இது அவர்களுடைய அறியாமையா அல்லது அசட்டையா. எதுவானாலும் அவர்கள் நன்மைக்கு என்று ஏன் எடுத்துக் கொள்ளவில்லை என்பது கேள்விக்குறியே.

மூக்கும் வாயும் மூடிய கவசம் அணிந்து செல்லும்படி மக்களுக்கு அறிவுறுத்தல் செய்யப்பட்டது. இது தங்களைப் பாதுகாக்க என்றால் சிலர் அதையும் செய்வதில்லை ஏனோ? இங்கே அங்காடிகளுக்குச் சென்றால் 2 மீற்றர் இடைவெளி இருவருக்கும் இடையில் இருக்கவேண்டும். சில இடங்களில் வாங்கும் பொருட்கள் கொண்டு செல்லும் வண்டில்கள் கிருமி நாசினியினால் சுத்தம் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்குத் தயாராக வைத்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் மக்கள் கையுறை அணிந்து நடமாடினர். தற்பொழுது ஒரு சிலரே அணிகிறார்கள்..

கொரோனா ஆரம்பம் ஆனது சீனாவில்,வுஹான் என்ற இடத்தில். அது அப்படியே பரவியது. பின் இத்தாலியில் கட்டுக்கடங்கா நிலையில் பரவிப் பெருமளவு மக்கள் உயிரிழந்தனர். அங்கு மருத்துவ வசதி குறைவாக இருந்தநியையில். அந்த நாட்டிற்கு உதவிசெய்ய யாரும் முன்வரவில்லை. ரஷ்யா,கீயூபா போன்ற நாடுகள் உதவிக்கரம் கொடுத்தன. அதன் பிறகுதான் ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகள் உதவிக்கரம் கொடுத்தன.

பின்பு கொரோனாவின் தாக்கம் ஐரோப்பா, ஆசியா, அமேரிக்காவென உலகெங்கும் பரவியது. பெரும் தொகையான மக்கள் இறந்தனர். இந்த வைரஸ் வயது முதிர்ந்தவர்களைக் கூடுதலாக தாக்கியது.

.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் வயது வந்த பெற்றோரை சிறுபிள்ளைகள் நெருக்கமாக நின்று சந்திப்பது தடைசெய்யபட்டது.. வீட்டிற்குள் செல்லாது வெளியில் நின்று கதைத்துவிட்டுச் செல்வது இப்படியான காலகட்டம். ஒருவர் இறந்தால் ஈமைக் கடமைகளுக்குக்கூட சென்று பங்குபற்ற முடியாத நிலை. இதுகொடுமையிலும் கொடுமை.

சில நாடுகளில் இறந்தோரைப் புதைக்கக்கூட இடமில்லாது. ஒரேகிடங்கில் எல்லோரையும் போட்டுப் புதைத்தனர். இது வலிமிக்க செயல்கள். 3வது உலகயுத்தம் கொரோனாவில் வந்துவிட்டது எனக் கூறுகிறார்கள். ஏழை பணக்காரன் என்ற நிலை மறந்து ஒரேநிலையில் மக்கள் இருக்கின்றனர். இது கொரோனாவின் திரு விளையாடலே! அதனால்தான் மனிதருக்குச் சில அனுபவத்தைக் கொடுத்துள்ளது. மக்கள் மக்களாக, மனிதம் உள்ளவராக வாழவேண்டும். பாரபட்சம் பார்க்கக்கூடாது என்பதையும் அறிவுறுத்தியது. கொரோனாவால் பொருளாதாரம் குன்றிவருகிறது உலகில். இதனால் பல பண முதலைகள் திணறிப் போய் நிற்கின்றனர். அமெரிக்காதான் வல்லரசுநாடு, தலைமைத்துவம் என்றெல்லாம் சொல்லி இன்று கொரோனாவிடமிருந்து மக்களைக் காப்பற்ற முடியவில்லை. காரணம் விஞ்ஞானம் மெய்ஞானத்தை வென்றிடுமா? கடவுள் ஒருவர் இருக்கிறார் எல்லாம் அவர்செயலே. இதை யாராலும் மறக்கமுடியுமா?

இன்னும் கொரோனவிற்கு மருந்து கண்டுபிடிக்கவில்லை. ஆனால் அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது. இப்பொழுதுதான் பாடசாலைகள், அங்காடிகள், அலுவலகங்கள் ஆரப்பிக்கத் தொடங்கியுள்ளன. அதுவும் பாடசாலைகள் முழுநேரமாக இல்லை. கொரோனாவின் ஆதிக்கம் ஆனி மாதம் ஆடிமாதத்தில் முடிவுக்கு வரலாம் எனப்பேசப்படுகிறது. இது எவ்வளவுக்கு உண்மையோ தெரியவில்லை. இருந்தாலும் மக்கள் இப்போது பழைய நிலைமைக்குத் திரும்புகின்றார்கள். இந்நிலை விரைவில் சீருக்கு வரவேண்டும் என்பதே எல்லோருடைய வேண்டுதலும். அதை நாமும் எதிர்பார்க்கின்றோம்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிறுகதை)

# கொறோனாவின் கொடுமை...(கலைவாணிஏகானந்தராஜா)

அதிகாலை 7 மணிக்கு டாண்னென்று வாசலில் நிற்கும் கண்ணன் அன்று சற்று தாமதமாகவே கேட்டைத்திறந்து கொண்டு உள் நுழைந்தவன் "அங்கேயே நில் கண்ணா வீட்டுக்குள் வராதே" என்ற அண்ணியின் குரல் கேட்டு உறைந்து நின்றான். "ஊரெல்லாம் கொரோணா தொற்று பரவிக்கொண்டிருக்குது நீ இரவிலை ஆஸ்பத்திரி வாசலிலை நிண்டு கொறோனா கிருமியை வாங்கிக்கொண்டுவந்திருப்பாய்" . இங்கு நான் ஒரு வருத்தக்காறி இருக்கிறன் என்டு உனக்கு யோசனையில்லையே ?

அந்தக் குந்திலை இரு நான் தேநீரும் பாணும் உன்ரை தம்பிட்ட கொடுத்துவிடுறன் சாப்பிட்டுப் போய் எங்கையாவது வாங்கில படுத்திட்டு இரவைக்கு வேலைக்குப் போ?.. என்று கூறியபடி சமையலறைக்குள் புகுந்தாள் அண்ணி கண்ணனுக்கு ஒன்றுமே புரியவில்லை . அண்ணி அண்ணி என்று கூப்பிட்டான். அவனது 14 வயது தம்பி தூரத்தில் நின்று பாணையும் தேநீரையும் தள்ளிவிட்டு திரும்பினான். "தம்பி நீ சாப்பிட்டாயா ? அண்ணி சாப்பிட்டாங்களா ? அண்ணிக்கு மத்தியானம் சமைக்க எண்டு முருங்கைக் காயும் கருவாடும் வாங்கி வந்தனான். இதை கொண்டுபோய் அண்ணிட்டை கொடு.. என்றான். அவனும் எட்டி எடுத்துக்கொண்டு ஓடினான்.

கண்ணன்என்ன செய்வதென்று தெரியாது தவித்தான். அரை குறையாக சாப்பிட்டு பக்கத்தில் நன்றியுடன் வாலாட்டிக்கொண்டு நின்ற நாய்க்கு மிகுதியை போட்டுவிட்டு எழுந்தான். கிணற்றடிக்குச் சென்று குளித்து விட்டு கொடியில் இருந்த காற்சட்டையை அணிந்துகொண்டு மீண்டும் வீட்டுக்குள் செல்வதற்காக காலடி எடுத்து வைத்தான். ஒருக்கா சொன்னா புரியாதா கண்ணா ? ஏன் நீ ஆஸ்பத்திரியிலேயே வாங்கில படுக்கலாமே வீட்டுக்கு வருவதால நாமெல்லாம் பயப்பட வேண்டியெல்லே இருக்கு என்று அண்ணி சொன்னதைக் கேட்டு கண்ணனுக்கு கொறோனா காச்சல் அடிப்பது போல் உடலெல்லாம் சூடேறியது. மனசு வலித்தது. ஏன் அண்ணி இவ்வளவு சுயநலமுள்ளவராக இருக்கிறார்? இவனால் அண்ணியின் வார்த்தைகளை ஜீரணிக்க முடியவில்லை .

பஸ் தரிப்பிடத்துக்கு வந்தான். அப்போதான் பஸ் புறப்பட்டிருக்கவேணும் தரிப்பிட கட்டிடத்துள் ஒருவரும் இருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு நித்திரை இல்லாது வீட்டுக்கு வந்த களை .ஆனால் அதைவிட அண்ணியின் செயல் அவனது நெஞ்சில் வலியையும் மனதில் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. அண்ணாவின் கடைசி நாள் கண்ணுக்குள் படமாக ஓடியது. புற்று நோயினால் இறக்கும் தறுவாயில் 18 வயதே நிரம்பிய கண்ணனை அழைத்து "தம்பி அண்ணியை நீதான் பார்க்கணும் .அம்மா அப்பா இறந்த நாளிலிருந்து உங்களைத் தாய்போல வளர்த்தவள் .அவவும் மிகவும் பலவீனப்பட்டு இருக்கிறா . எப்படியாவது நீ தான் அவளை காப்பாத்தனும்."

அண்ணன் இறந்த அன்றே கண்ணண் ஒரு முடிவுக்கு வந்தான். மேற்கொண்டு படிக்கும் சிந்தனையை கைவிட்டான். தம்பியை படிப்பிக்கவும் அண்ணியை காப்பாற்றவும் தான் வேலைக்கு செல்வதென்று முடிவெடுத்தான். ஒரு சிநேகிதனின் தந்தையின் சிபாரிசில் யாழ் போதனாவைத்தியசாலையில் காவலாளி வேலையில் சேர்ந்தான் . அவர்களின் கடமை நேரம் காலை மாலை என்று மாற்றி செய்வதாக இருந்தது. ஆனால் கண்ணனோ அண்ணிக்கு பகலில் சமைத்துக் கொடுப்பதற்கும் தம்பியை கவனிப்பதற்குமாக இரவு வேலையை மட்டும் தேர்ந்து கொண்டான்.பிள்ளைகள் இல்லாததால் அண்ணி கண்ணண் மீதும் தம்பி கஜன் மீதும் மிக அன்பாகவே இருப்பாள். ஆனால் ஒரேஒரு குறை அவளிடம் . தனிப்பிள்ளையாக வளர்ந்ததாலும் அண்ணாவுக்கும் பிள்ளை இல்லாத தாலும் அண்ணியிடம் சுயநலம் நிறையவே காணப்பட்டது. எதையும் தனக்கு வைத்துக்கொண்டுதான் மற்றவர்களுக்கு கொடுப்பாள்.

இரவு நித்திரை விழித்தகளை கண்களை அயரவைத்துவிட்டது. அவன் கண் விழித்தபோது மாலை 4 மணியாகிவிட்டது. எழுந்து உட்காரவும் பஸ் ஒன்று தரிப்பிடத்துக்கு வரவும் சரியாக இருந்தது. கண்ணண் பஸ்ஸில் ஏறி ஒரு கரையாக உட்கார்ந்தான்.பஸ் வேகத்தை விட அவனது சிந்தனை மிக வேகமாக ஓடியது. அவன் வேலைக்கு சேர்ந்த நாளிலிருந்து மாலை 4 மணிக்கு புறப்பட்டு காலை 6 மணிக்கு வீடுவருவது வழக்கம். வீட்டுக்கு வந்ததும் முற்றத்துக்கு நீர் தெளித்துக் கூட்டி சுத்தம்செய்து. வளவெல்லாம் சுத்திப்பார்த்து மரங்களுக்கு நீர் பாய்ச்சி மரத்திலிருந்து விழுந்த தேங்காய்களை பொறுக்கி உரித்து வைப்பான். அதன்பின்னரே தன் கடமைகளை செய்து குளித்தபின் சுவாமி அறையில் தாய் தந்தையரதும் அண்ணனதும் படத்துக்கு விளக்கேற்றி கும்பிட்டு சமையலறைக்கு வருவான். அண்ணியிடம் மருந்துகள் ஒழுங்காக எடுத்தீர்களா என்று விசாரித்தபடியே தேநீர் வாங்கி குடித்ததும் சமையலை ஆரம்பித்துவிடுவான். இரவு வைத்தியசாலைக்கு வந்தவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகக்கதைகளையும் தன்னுடன் வேலை பார்க்கும் நண்பர்களிடம் பேசிக்கொண்ட சுவார்ஷ்யமான கதைகளையும் பேசிக்கொண்டே சமையலை முடிப்பான். அண்ணிக்கு சரியாக 12.30 மணிக்குச் சாப்பாடு வைக்கணும். இல்லையேல் அவர் இருந்தால் அப்படி செய்வார் இப்படி செய்வார் என்று கணவர் புராணம் பாடத் தொடங்கிவிடுவாள்.

"ஆஸ்பத்திரி வந்திட்டுது இறங்கு" என்று பஸ் கண்டக்டர் சத்தம் கேட்டு தன்னை சுதாகரித்துக்கொண்ட கண்ணன் இருக்கையை விட்டு எழுந்தான். அப்பொழுதுதான் முன் இருக்கையில் இருந்து எழுந்த ஒரு வயதான மூதாட்டி எழுந்து நடக்கமுடியாமல் தள்ளாடுவதை அவதானித்தான். அந்த இடத்திலே இறங்கவேண்டியவர்கள் மூதாட்டியை பார்த்தும் பார்க்காததுபோல முண்டியடித்து இறங்கிக்கொண்டனர். கண்டக்டர் மீண்டும் துரிதப்படுத்தினார். அந்த மூதாட்டியும் இருப்பதுபோல் கண்ணனை பார்த்தாள். கண்ணனுக்கு தாயின் முகத்தைப் பார்த்தது போல உணர்வு ஏற்பட்டது. சற்றும் யோசிக்காமல் அம்மூதாட்டியை தூக்கி இறக்கி அப்படியே வாட்டிலும் சேர்த்துவிட்டான்.

அப்போது அந்த வாட்டில் நின்ற தாதி அவனை இனம்கண்டுகொண்டு "இந்த மூதாட்டிக்கு கொறோனா தொற்று இருப்பதுபோல் தெரிகிறது நீ ஏன் இந்த வேலையை செய்தாய் என்று கடிந்தாள்." அப்போதான் கண்ணன் காலையில் அண்ணி தன்னை கடிந்துகொண்டதை நினைத்தான். தான் கடமை செய்ய வேண்டிய வாசலில் போய் நின்றுகொண்டான். இரவு 2 மணிக்கு கண்ணனுக்கு உடல் நடுக்கமெடுத்தது. சக ஊழியர்கள் வாட்டில் கொண்டு சேர்த்தனர். மேலும் மூச்சு முட்டிக்கொண்டு வந்தது. தான் இறந்துவிடுவேனோ என்ற பயத்தில் மானசீகமாக அண்ணனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அண்ணியை தனியே விட்டு செல்லப்போகிறேனே என்று வருந்தினான். கண்களில் அவனை அறியாமலே கண்ணீர் வளிந்தோடியது.

காலையில் கண்விழித்தபோது தனிக் கண்காணிப்பு அறையில் இருப்பதையும் தனக்கு குளாய்களெல்லாம் பூட்டப்பட்டிருந்ததையும் உணர்ந்தான். அவனை சுற்றி பல முகமூடியணிந்த டாக்டர்கள் ஆங்கிலத்தில் பேசியபடி நின்றிருந்தனர். மூன்று நாட்களின் பின் பக்கத்துக் கட்டிலில் இருந்த மூதாட்டி கண்ணனிடம் வந்து உனக்கு ஒன்றும் ஆகாது தம்பி பயப்படாதே நீ நல்லாய் இருப்பாய் என்று ஆசிகள் கூறிவிட்டுச் சென்றாள். மற்றும் சில நாட்களில் கண்ணன் பூரண சுகத்துடன் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குள் நுளைந்த கண்ணன் அண்ணி அண்ணி என்று கூப்பிட்டபடி தேடினான். அங்கு ஓடிவந்த கஜன் கூறியவற்றை கேட்டு மீண்டும் கொறோனா வைரஸ் தாக்கியது போல் மூச்சுத் தடுமாறினான்.

அவனை கட்டியணைத்தபடி கஜன் "அண்ணா கடைசியாக நீங்கள் வீட்டிலிருந்து போன அன்று பக்கத்து வீட்டு மானிலா அன்ரி வந்தா. அண்ணியுடன் அதிக நேரம் பேசினா. வெளிநாட்டிலிருந்து ஒரு போதகர் வந்ததாகவும் தான் அந்தப் பூசையில் கலந்து கொண்டதாகவும் சொல்லி அண்ணிக்கும் தான் ஆசீர்வாதம் வாங்கிவந்ததாகக் கூறி தலையில் கை வைத்து ஏதோ நீரைத் தெளித்துவிட்டு சென்றா. அன்று இரவு அண்ணி மூச்சுவிடமுடியாமல் தவித்தா. பக்கத்து வீட்டு மாமா தான் அம்புலன்ஸ்க்கு அடித்தார். முகமூடியுடன் வந்த டாக்டர்கள் அண்ணிக்கும் மூக்கில் குளாய்கள் எல்லாம் பொருத்தி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள். என்று கூறினான். கண்ணன் தம்பியை தன்னுடன் அணைத்துக்கொண்டு அண்ணி அண்ணி என்று குழறியழுதான்.....

முற்றும்.

---

**தகவல்.....** கொரோனா-கோவிட் கிருமியானது உலகம்வாழ் முதியவர்களைத்தான் அதிகமாகத் தாக்கி உயிர்ப்பலி எடுத்துவருவதை அறிவீர்கள். இந்த நோய்பற்றிய பாதுகாப்பு,மற்றும் தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதில் யேர்மனிய வயோதிபர்களில் 81% பேர் ஆவலுடன் தகவல்களை அறிந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபடியால்தான் யேர்மனியின் வயோதிபர்கள் உயிரிழப்பு குறைவாக இருந்துவருகின்றது. இந்தக் தகவல்களை எப்படிப் பெற்றுக்கொண்டார்கள் என்ற விபரத்தை சுகாதாரப் பகுதியின் புள்ளிவிபரம் எடுத்துக்காட்டியுள்ளது.

| | |
|---|---|
| 1-தொலைக்காட்சி | - 92.8% |
| 2-இணையத்தளம் | - 77.4% |
| 3-பத்திரிகை,சஞ்சிகை | - 58.7% |
| 4-வானொலி | - 54.9% |
| 5-வைத்தியர்கள் | - 08.6% |
| 6-உறவினர்கள் | - 08.3% |
| 7-மருந்தகம் | - 06.7% |
| 8-நட்புகள் | - 06.6% |
| ஏனையவை | - 03.2% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா யுத்தத்தில் பெண்களின் பங்களிப்பு...

கொரோனா கொடிய யுத்தத்தில் பெண் சிவிலியர்கள்தான் அதிக பங்காற்றிப் பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்றி இருக்கிறார்கள். இந்தப் பெண் தெய்வங்களைப் போற்றி வணங்குவோம். சில நாடுகளில் பெண்களின் பங்களிப்பைப் பார்ப்போம்..

| நாடு | -பெண்மருத்துவர்கள் | -பெண் செவிலியர்கள் |
|---|---|---|
| சீனா | -48.9% | -99% |
| யேர்மனி | -45.2 | -89 |
| இத்தாலி | -40.3 | -79 |
| அமெரிக்கா | -34.1 | -94 |
| இந்தியா | -27.7 | -89 |

## கொரோனா யுத்தத்தில் பெண்களின் பங்களிப்பு...

கொரோனா கொடிய யுத்தத்தில் தமது நாட்டைப் பாதுகாப்பதற்காக கடும் நடவடிக்கைகளை எடுத்து பெருமளவு உயிரிழப்புக்களைத் தவிர்த்துக்கொண்ட சில நாடுகள் முக்கியவை எனக்கணிக்கப்பட்டுள்ளன. இதன் வரிசையில் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்டதுடன் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்ட நாடுகளின் அரச பெண் தலைவர்கள்...

01-ஜசிந்தா அர்டர்ன்- நியூசிலாந்து (Jacinda Ardern)
02-சன்ன மரின் - பின்லாந்து (Sanna Marin)
03-எஞ்சலா மேக்கல் - யேர்மனி (Angela Merkel)
04-மெட் பிரெட்ரிக்ஸன் - டென்மார்க் (Mette Frederiksen
05-சை இங் வென் - தைவான் (Tsai Ing Wen)
06-எர்னா வொல்பெக்ச் - நோர்வே (Erna Solberg)
07-கேத்ரின் ஜாக்கோப்ஸ் - ஐஸ்லாந்து (Katrin Jokobsdottir

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா செய்திகள்....

-கோரோனா தொற்றுநோய் மத்தியில் நீண்டகால பழைய பகைமையை மறந்து வியட்நாம் நாடு அமெரிக்காவிற்கு மருந்து உதவிகளை வழங்கியுள்ளது.

-அமெரிக்க பிரபல பத்திரிகை ஒன்று முதன் முதலாகப் பதினைந்து பக்கங்களில் கொரோனாவால் மரணமடைந்தவர்களின் விபரங்களை வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளது.

-அமெரிக்காவில் ஒரே நாளில் கொரோனா கோவிட் நோயினால் 27.4.2020 அன்று 2.494 பேர் பலியாகியுள்ளனர்.

-கொரோனோ தாக்கத்தால் உலகில் சுமார் 160 கோடி தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் தோன்றும் என ஐக்கியநாடுகள் சபையின் தொழிலாளர் அமைப்பு (W.L.O) அறிவித்துள்ளது.

-அமெரிக்காவில் கொரோனா தொற்றுநோய் பெரும் உயிரழிவுகளை ஏற்படுத்தியிருப்பதை கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் இப்படி ஒரு நோய்வந்து அமெரிக்காவை ஆட்டிப்படைக்கவில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

-கொரோனா தொற்றால் உலகம் முழுவதும் சுமார் 545 கோடி மக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என உலக சுகாதார தாபனம் (W.H.O) அறிவித்துள்ளது.

-கோவிட்-19 கொடிய நுண்ணுயிர் கிருமித் தாக்குதல்களுக்கு ஆயுள்வேதம், கிராமிய வைத்தியம், மூலிகை வைத்தியம் என அத்தனையும் கைகொடுக்கவில்லை என்னும் உண்மை உலகத்துக்குப் பாடம் கற்பித்தது.

-கொரோனா வைரஸ் தாக்கத்தால் உலகம் முழுவதும் சுமார் 100 கோடி மாற்றுத் திறனாளிகள் பாதிப்படைந்துள்ளனர்.

-கொரோனா நோயினால் ஆபிரிக்கா கண்ட நாடுகளில் சுமார் 2 லட்சம்பேர் இறப்பார்கள் என்றும் இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும்போது உலகில் சுமார் 26 கோடி மக்கள் பசி, பட்டினியை எதிர்கொள்வார்கள் எனவும் ஐக்கியநாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் (W.F.O) ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

-தடுப்பூசிக்கு ஏற்ப கொரோனா கோவிட் கிருமிகள் உருமாற்றிக்கொள்கின்றன என 62 நாடுகளில் 5.349 கொரோனா மாதிரிகளை பரிசோதித்ததில் கண்டறியப்பட்டுள்ளது.

-கோவிட்-19 தொற்றுக்கிருமித் தாக்குதலால் இந்தியாவில் மரணமடைந்தவர்களில் 64 வீதம்பேர் ஆண்கள் என இந்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கொரோனா ஒழிப்பு நிவாரண உதவிக்காக சீனா 36.000 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.
-உலகில் 204 நாடுகளில் கொரோனா தொற்று இருந்தாலும். 29 நாடுகளில் இந்த நோயால் ஒருவர்கூடப் பாதிக்கப்படவில்லை என்ற நல்ல செய்தியும் கிடைத்திருக்கின்றது.
-இந்த ஆண்டு முடிவடைய உலகில் 8.5 கோடி சிறுவர்கள் வறுமையின் பிடிக்குள் தள்ளப்படுவார்கள் என உலக சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.
-கடந்த ஆறுமாதத்தில் உலகம் பூராகவும் சமார் 600 தாதியரை கொரோனா நோய் பலி எடுத்துள்ளது.
-கொரோனா தொற்றால் கடந்த 50 ஆண்டுகள் இல்லாதஅளவுக்குப் படுமோசமான உணவு நெருக்கடி ஏற்படும் என ஐக்கியநாடுகள் சபையின் உணவுத்திட்டப் பிரிவு அறிவித்துள்ளது.

## சாதகமான விடையங்கள்...

-கடந்த 25-5-20 அன்று உலக இஸ்லாமியர்களின் றமளான்தினம் அமைதியாகக் கொண்டாடப்பட்டவேளை யோர்மனியில் இஸ்லாமியர்களின் வழிபாட்டுக்கு கத்தோலிக்க தேவாலயம் ஒன்று திறந்துவிடப்பட்டு அங்கு வழிபாடு நடைபெற்றது. இப்படி இந்தியாவிலும் இந்துக்கள்- இஸ்லாமியர்கள் ஒருமித்துப் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இவற்றைப் பார்க்கும்போது உலக மக்களிடையே மத நல்லிணக்கம் தோன்றியிருப்பது நல்ல விடையமாகும்.
-இந்தியா-தூத்துக்குடியில் வாழ்ந்துவந்த ஒரு பிச்சைக்காரர் தான் பிச்சை எடுத்துச் சேர்த்து வைத்திருந்த பணத்தில் 10 ஆயிரம் ரூபாவை இந்திய கொரோனா நோய் ஒழிப்பு நிதிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.
-உலக கொள்வளவு-விற்பனை வரலாற்றில் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் இவ்வருடம்தான் online மூலம் மிக அதிகமானோர் உணவுப் பொருட்களை வேண்டியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.
-கைகழுவும் கிருமிநாசினிகள், கையுறைகள், முகஉறைகள், உடற்கவசங்கள் போன்ற சுகாதார பாதுகாப்புப் பொருட்கள் இவ்வருடம் மாசி,பங்குனி,சித்திரை மாதங்களில் உலகம் முழுவதும் மிக அதிகமாக விற்பனையாகியுள்ளன.
-பத்திரிகை, சஞ்சிகை, வாசிப்புப்பழக்கம், கணனிகளில்தேடிப்படிக்கும் பழக்கம் மக்களிடையே என்றுமில்லாதவாறு அதிகரித்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதகமான விடையங்கள்

-உலகமயமாக்கலில் எதிர்பாராத மாற்றங்கள், உலகப்பொது நடைமுறைகளை மாற்றி அமைத்திருக்கின்றது.
-கோவிட்-19 தொற்றுக்கிருமிக்கு இன்னும் பல வருடங்கள் முகம்கொடுக்க நேரிடலாம். எனவே உலக மக்கள் விழிப்பாகவும் பாதுகாப்பாகவும் இருக்கவேண்டும் என உலக சுகாதார நிறுவனத்தின் பிரதான விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.
-உலக சினிமாத்துறையை நட்டத்தில் ஆழ்த்திப் புரட்டிப் போட்டது. பல பிரபல ஹொலிவூட் நடிகர்கள், சினிமா நடிகர்கள் இறந்திருக்கிறார்கள்.- கசிப்பு அதாவது சட்டவிரோத மது உற்பத்தி அதிகரித்ததுடன் அவற்றைக்குடித்து மாண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தன.
-உலகில் சுமார் 30 கோடி சிறுவர்களின் கல்வியில் பாதிப்பு. உலக கல்வி நிலை மோசமான முறையில் பாதிப்பு உலகவங்கி எச்சரிப்பு.
-எதிர்காலத்தில் கோவிட்-19 வைரஸ் நோய் குறைவடைய எயிட்ஸ் நோய் அதிகரிக்கும் என அமெரிக்க ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

## கொரோனா சொல்லித்தந்த தமிழ்...

| | |
|---|---|
| Virus | நுண்ணுயிரி |
| Quarantine | ஒதுக்கம் |
| Self Quarantine | தன்னொதுக்கம் |
| Home Quarantine | வீட்டு ஒதுக்கம் |
| Isolation | தொற்றொதுக்கம் |
| Ventilator | மூச்சியக்கி |
| Epidemic | கொள்ளைநோய் |
| Pandemic | பெருங்கொள்ளைநோய் |
| Personal Protectiv Equipments | உடற்கவசம் |
| Face Mask | முகக்கவசம் |
| Community Spread | சமூகப்பரவல் |
| contact Tracing | தொடர்புத்தட அறிவித்தல் |
| Social Distance | சமூக இடைவெளி |
| Wash | கழுவுதல் |
| Avoid | தவிர்த்தல் |
| Distance | இடைவெளி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச்செய்திகள்:-

-உலகப்பொருளாதார வலை அமைப்பிலிருந்து சீனாவை ஓரம்கட்ட அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் முனைப்புக்காட்டி வருகின்றன.
-மெக்ஸிக்கோவில் மாபியா என்று சொல்லப்படும் கடத்தல் கற்பழிப்பு கொள்ளைக் கும்பல்களின் தாக்குதல்களால் ஏப்ரல்-மே மாதங்களில் மட்டும் சுமார் 3.000பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.
-அடுத்த 8, 9 மாதங்களில் இந்தியாவில் மட்டும் சுமார் 2 கோடி குழந்தைகள் உலகம் முழுவதும் 12 கோடி குழந்தைகள் பிறக்கும் எனவும்கூடுதலாக சீனா, பாக்கிஸ்தான்,நைஜீரியா,இந்தோனிஷியா நாடுகளிலே அதிக குழந்தைகள் பிறக்கும் என உலக சுகாதார தாபனத்தின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.
-அடுத்த 5 ஆண்டுகளில் உலக காசநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து சுமார் 14 லட்சம்பேராக உயரும் என உலக சுகாதார தாபனத்தின் ஆய்வு தெரிவித்துள்ளது.
-2ம் உலகப்போர் முடிவடைந்த 75 வது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் ஐரோப்பா, யப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் நடைபெற்றன.
-2020 பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் உலக கார் உற்பத்தி விற்பனை பெருமளவு பாதித்ததால் உலகப்பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. எண்ணெய் உற்பத்தி நாடுகளிலும் விற்பனை வீழ்ச்சியால் உலகப் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது.
-உலகிலுள்ள அனைத்து வழிபாட்டுத்தலங்களும் கடந்த 2 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டுக்கிடந்ததால் வழிபாட்டுத்தலங்களுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டதுடன் கோடிக்கணக்கானோர் வேலைகளையும் இழந்தனர்.
-இந்தியாவில் பெரும் வருவாயை அள்ளிக்கொடுக்கும் திருப்பதி கோவிலுக்கு மட்டும் 400 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாம். ஒட்டுமொத்தமாக இந்தியாவில் மட்டும் பக்தர்களால் எத்தனைகோடி நட்டம் ஏற்பட்டது என்று பாருங்கள். ஆனால் திருப்பதி கோவிலில் இந்த கொரோனா தனிமைப்படுத்தல் நாட்களில் Online உண்டியல் வரவாக 2 கோடி ரூபாவும் கிடைத்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.
-கடந்த 20 ஆண்டுகளில் சீனாவிலிருந்து 4 கொள்ளை நோய்கள் பரவி (சார்ஸ், ஏவியன்புளு, ஸ்வைன்புளு, கோவிட்-19) உலக மக்களை அழித்ததாக அமெரிக்கா குற்றம் சாட்டியிருப்பதுடன் உலக சுகாதார நிறுவனத்தின் அங்கத்துவ பதவியிலிருந்தும் வெளியேறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-அடுத்த 6 மாத காலப்பகுதியில் உலகில் பல்வேறு நோய்களால் சுமார் 12 லட்சம் குழந்தைகள் மரணிக்க வாய்ப்பு இருப்பதாக (யுனிச்செவ்) ஐக்கியநாடுகள் சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டு நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது.

-எயிட்ஸ் நோயைப்போல கொறோனா கோவிட்-19 கிருமி தொற்றுநோயும் எளிதில் ஒழிந்துபோகாத நோய் என உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது.

-தற்போது உலகில் நிலவும் கொரோனா யுத்தத்தால் உலகப்பொருளாதாரம் 8.2 வீதத்தால் வீழ்ச்சியடையும் 3.5 கோடி மக்கள் வறுமையால் வாடுவார்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.

-இரவுக்களியாட்ட நிகழ்வுகளை நடாத்தி அதிக வருவாயை ஈட்டிய நாடுகளின் ஹொட்டல்கள், விடுதிகள், உணவுச்சாலைகள் நடாத்தி வருவாயை ஈட்டிய தனியாரும் கம்பனிகளும் வருமானத்தில் வீழ்ச்சி.

-உல்லாசப் பயணிகள் வருவாய்த்துறை வீழ்ச்சியால் பல நாடுகள் பொருளாதாரத்தை இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

-உலகப்பொருளாதாரத்தில் சுமார் 5.88 ட்ரில்லியன் டொலர் இழப்பு ஏற்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது.

-உலகின் மிகப்பெரும் சுமார் 10 லட்சம் அகதிகள் வசிக்கும் அகதிமுகாம் என்றால் பங்களாதேஷிலுள்ள முகாம் ஆகும். இங்கும் சிலருக்குத் தொற்று கண்டுபிடிக்கப்பட்டபடியால் பலர் உயிரிழக்க வாய்ப்பு இருப்பதாக அந்த முகாமின் அதிகாரி ஒருவர் BBC செய்திப்பிரிவிற்குத் தெரிவித்தார்.

-சீனா 2 செயற்கைக் கோள்களை விண்ணுக்கு ஏவிப்பரிசோதனை செய்துள்ளது.

-கொரோ தாக்கத்தால் இந்தியாவில் 13.5 கோடி தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

-சிறுமிகளை கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த சம்பவங்களும் போர் பகுதியில் நடைபெற்றிருக்கின்றன. போர் காரணமாக குழந்தைகள் உயிரிழப்பதும், கை, கால் உள்ளிட்ட உடல் உறுப்புகளை இழப்பதும் நடந்து வருகின்ற நிலையில், ஆயுதங்களின் பயன்பாடு மும்மடங்கு அதிகரித்து வருகிறது.

-கடந்த 2019 ஆம் ஆண்டில் போர் பகுதிகளில் 52 கோடி குழந்தைகள் வசித்து வந்தனர். ஆப்கானிஸ்தான், மத்திய ஆப்பிரிக்க குடியரசு, காங்கோ, ஈராக், மாலி, சோமாலியா, தெற்கு சூடான், சிரியா, யெமன் ஆகிய நாடுகள் போரால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-பாக்கிஸ்தானில் ஏற்பட்ட விமான விபத்தில் பயணம் செய்த 107 பேரும் பலியாகியுள்ளனர்.
-ஆண்டுதோறும் சுமார் 78 மில்லியன்பேர் பாலியல் சம்பந்தமான தொற்று நோய்களுக்குப் பலியாகி வருகிறார்கள் என உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது.
-உலகில் சில நாடுகளில் இடம்பெற்றுவரும் போரால் ஆண்டுக்கு 1 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழக்கின்றனர் என்று "சேவ் த சில்ரன்" என்ற சர்வதேச அமைப்பு தெரிவித்தது. இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 2013-ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை 10 நாடுகளில் நடைபெற்ற போரின் காரணமாக 6,50,000 கைக்குழந்தைகள் உயிரிழந்தனர். சண்டையின்போது மட்டுமின்றி, போருக்கு பிறகு ஏற்பட்ட பஞ்சம், மருத்துவம் கிடைக்காதது, சுகாதாரமின்மை உள்ளிட்ட பல காரணங்களால் குழந்தைகள் உயிரிழந்தனர்.
-எகிப்தில் பெண்களின் பாலுணர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவர்களின் பிறப்புறுப்பை சிறுவயதிலேயே (8 - 10 வயது) சிதைக்கும் வழக்கத்தால் இன்றும் பல்லாயிரம் பெண்கள் பாதிப்படைகிறார்கள் என ஐ.நா.சபையின் சிறுவர் பாதுகாப்பு தாபனம் கண்டனம்.
-அமெரிக்காவில் கறுப்பினத்தவர் ஒருவர் பொலிசாரால் தொண்டைநெரித்துக் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்காவில் பல நகரங்களிலும் வன்முறைகள் வெடித்தன. சுமார் 5.000 பேர் கைது செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான பொலிசார் காயம். பல கட்டிடங்கள் வாகனங்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.
-நிறவெறிக்கெதிரான போராட்டங்கள் ஐரோப்பிய, ஆசிய நாடுகளிலும் நடைபெற்றுள்ளன. இதேவேளை மக்களை அடிமைப்படுத்தி ஆட்சிபுரிந்தவர்களின் சிலைகளும் பல நாடுகளில் உடைத்து வீசப்பட்டன.
-கடந்த 50 வருடங்களில் இந்தியாவில் 4 கோடி 58 லட்சம் பெண்கள் காணாமல் போயிருக்கிறார்கள். சீதனம், சாதியம், சமயம், கொத்தடிமை, பாலியல், வறுமை, சமூகக்கட்டுப்பாடு, மூடநம்பிக்கை, அரசியல் போன்ற பல காரணங்களாலேயே இத்தொகையினர் காணாமல் போயிருப்பதாக ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இப்படியாகக் காணமல் போனோர் தொகையில் இந்தியாவும் சீனாவும்தான் உலகில் முன்னிலை வகிக்கின்றன. இதேபோல கடந்த 50 ஆண்டுகளில் உலகம் முழுவதும் 14 கோடி 26 லட்சம் பெண்கள் காணாமல் போயிருக்கிறார்கள்.
-ரஷ்ஷியாவின் ஜனாதிபதியாக 2036ம் ஆண்டுவரை தற்போதய ஜனாதிபதி புற்றின் தொடர ரஷ்ஷிய பாராளுமன்றத்தில் 75 வீதமானோர் வாக்களித்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகச்செய்திகள் சில...

-தற்போதய ஆட்சியில் 12 இராணுவ அதிகாரிகள் நிர்வாக சேவைகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 200 இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. நாடு இராணுவ ஆட்சிக்குச் சென்றுகொண்டிருப்பதாகப் பல புத்திஜீவிகள் விசயனம் தெரிவித்துள்ளனர்.

-ஐரோப்பிய யூனியன் கொரோனா நிதி உதவியாக இலங்கைக்கு 450 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

-இலங்கை புகையிரத சேவைக்குக் கடந்த 2 மாதங்களில் 900 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

-இலங்கையில் அம்பன் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் 30 மில்லின் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. சுமார் 50.000 பேர் பாதிப்பு.

-எதிர்வரும் ஆகஸ்ட் 1ம் திகதி விமான நிலையம் பொதுமக்கள் போக்குவரத்துக்குத் திறக்கப்படும். சர்வதேச விமானப் பயணங்களும் ஆரம்பிக்கப்படும். பதிவு செய்யப்பட்ட விடுதிகள் திறக்கப்படும். கொரோனா தடுப்பு நடவடிக்கைகளும் நீடிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

-பழம்பெரும் அரசியல் வாதிகளான மகிந்த ராஜபக்ஸ, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தமது அரசியல் வாழ்வில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளனர்.

-இலங்கையில் புகைத்தலால் ஆண்டு தோறும் 20.000 பேர் உயிரிழக்கின்றனர் என சுகாதாரத்திணைக்களம் அறிவித்துள்ளது.

-யாழ் இராச்சியத்தை ஆண்ட சங்கிலி மன்னனின் 401 வது ஆண்டு நினைவு தினம் நல்லூரில் கொண்டாடப்பட்டது.

-சுவீஸ் நாட்டின் வர்த்தகரான S.K நாதன் அவர்களின் 5.2 கோடி ரூபா நிதி அன்பளிப்பினால் கிளிநொச்சியில் எலும்பு முறிவு சத்திர சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கட்டுவருகின்றது.

-இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ தனது 3 மாதச் சம்பளத்தை கொரோன நிதி உதவிக்கு வழங்கியுள்ளார்.

-இலங்கையில் கொரோனா கோவிட் கிருமித்தொற்றால் மொத்தமாகப் 11 பேர் இறந்தனர். கட்டுப்படுத்திய இலங்கை அரசை ஐக்கியநாடுகள் சபை பாராட்டியுள்ளது.

-இலங்கைப் பாராளுமன்றத்தேர்தல் 5.8.2020 அன்று நடைபெறுகின்றது 196 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான இத்தேர்தலின் முடிவுகள் 6-08-2020 அன்று மாலை வெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தேர்தல்க்களம்...

இலங்கைப் பாராளுமன்றத்தின் 16வது பொதுத்தேர்தல் 24.4.2020ல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தும் கொரோனாத் தாக்கத்தால் பின்போடப்பட்டு எதிர்வரும் 05-08-2020 அன்று நடைபெறும் என அரசு அறிவித்துள்ளது.

இத்தேர்தல்பற்றிய சில புள்ளிவிபரங்களைப் பார்ப்போம்...

-22 தேர்தல் மாவட்டங்களில் தேர்தல் இடம் பெறும்.

-25 அரசியல் கட்சிகளும் 313 சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றன.

-அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 3.652 பேரும் சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த 3.800 பேருமாக மொத்தம் 7.452 பேர் போட்டியிடுகின்றனர்.

-தேர்ல் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படும் 196 (M.P) பிரதிநிதிகள் தேர்தல்மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். வாக்குகளின் அடிப்படையில் 29 பேர் தெரிவு மொத்தம் 225 பிரதிநிதிகள்.

| | | | |
|---|---|---|---|
| அநுராதபுரம் | 09 | புத்தளம் | 08 |
| காலி | 09 | பதுளை | 09 |
| அம்பாந்தோட்டை | 07 | கொழும்பு | 19 |
| களுத்துறை | 10 | கம்பகா | 18 |
| கேகாலை | 09 | கண்டி | 12 |
| மாத்தளை | 05 | குருநாகலை | 15 |
| மாத்தறை | 07 | மொனாராகலை | 06 |
| பொல்லநறுவை | 05 | நுவரெலியா | 08 |
| இரத்தினபுரி | 11 | | ---- |
| | | | 167 |

வடகிழக்கு மாகாணம்

| | |
|---|---|
| -யாழ்ப்பாணம் + கிளிநொச்சி மாவட்டம் | 07 |
| -வன்னி தேர்தல் மாவட்டம் | 06 |
| (மன்னார்+முல்லைத்தீவு+ வவுனியா | |
| -அம்பாறை (தியாகமடுல்ல) மாவட்டம் | 07 |
| -திருகோணமலை மாவட்டம் | 04 |
| -மட்டக்களப்பு மாவட்டம் | 05 |
| மொத்தம் | 196 |

தேர்தல் பற்றிய புள்ளி விபரங்கள் எமது அடுத்த இதழில் வெளிவரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவுதிருகோணமலை -480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- மன்னார் -480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா -480-00

05. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா -480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - மட்டக்களப்பு -480-00

07. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா

08. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி -200-00

09. செல்வன். சியாந்த் எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

10. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 1-05-2020 (மேலதிகச் செலவு) - 135-03
அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler -Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07.செல்வன் சியாந்த் எமில் சர்வானந்தன் -Blieskastel+200-00
(ஆதரவற்ற சிறார் ஒருவரின் வருடாந்த கல்விச்செலவு அன்பளிப்பு

07. திரு. Johannas Gruendler - Köln +500-00
(முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி விசேட நிதி உதவி)

08.Corona நிதி உதவி வழங்கியவர்கள்...

திரு ப.பசுபதிராசா - Wuppetral - 100-00
(இவர் சென்றமாதமும் 100 யூரோவழங்கியிருக்கிறார்(மொத்தம்200)
திருமதி கெங்கா ஸ்ரான்லி-Erftstadt - 30-00
திருமதி கலா மகேந்திரன் -Oberhausen - 25-00
திரு செ.சிவஞானம் -London - 50-00
திரு.திருமதிசிவகாந்த் கிறேஸ்-Düsseldorf- 100-00
------
305-00 + 305-00
-------
+ 1349-97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | + 1349-97 |
| **அனுப்பியது:-** | | |
| (1) ஒளிரும் இல்லம் - மல்லாவி- துணுக்காய் (மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வு இல்லம்) | - 500-00 | |
| (2) மரியன்னை சிறுவர் காப்பகம் பேசாலை - மன்னார் | - 480-00 | |
| (3) தமிழ்ப்பண்பாட்டு ஆய்வு மன்றம் ஊடாக மலையக கொரோனா உதவி - நுவரெலியா | - 305-00 | |
| | ------- | |
| Mann A/C | 1285-00 | |
| வங்கி வரி 01.05.2020 - 31.05.2020 - 12.89 | | |
| 01.06.2020 - 30.06.2020 - 12.30 | 25-19 | |
| | -------- | |
| | -1310-19 | -1310-19 |
| | | -------- |
| **மீதி கையிருப்பு 30.06.2020** | | - 39-78 |

**குறிப்பு:-** கொரோன நிதி உதவியாக சென்றமாதம் 1478-00 இந்தமாதம் 305-00 மொத்தம் 1783-00 யூரோக்கள் தாயகத்திற்கு அனுப்பியுள்ளோம்!..


ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்
Olirumvaalvu Organizalons - Thunukkai
Gmail:-olirumvaalvu.Thunukkai@gmail.com
206 0620 1096
/DS/TNK/RVSS/22/2015
பற்றுச் சீட்டை
திகதி: 01/06/2020
தொ.இல
எழுத்தில்: ... மட்டும் பெற்றுக்கொண்டேன்.
பணம் வழங்கியவர் ஒப்பம்
பொருளாளர் ஒளிரும் வாழ்வு அமைப்பு துணுக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி:- 23/06/2016

வ.சிவராசா,

பிரதம ஆசிரியர்,

மண்கலை இலக்கிய சஞ்சிகை,

ஜேர்மனி.

**நன்றிதெரிவித்தல்**

2012 ம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளின் நலனை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பானது தற்போது பெண் தலைமைத்துவக்கடும்பங்கள், ஆதரவற்ற முதியவர்கள், தாய் தந்தையை இழந்த பிள்ளைகள் போன்றோருக்கு உதவி வருகிறோம்.

எமது அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் மண் சஞ்சிகை குழுமத்தினரும், அதன் ஆசிரியர் மதிப்பார்ந்த திரு. சிவராஜா அவர்களும் எமது திட்டங்களுக்கு உதவி வருகிறார். அந்த வகையில் எமக்கு அரசாங்கத்தினால் தரப்பட்ட பண்ணைக்காணியில் தென்னை நடுவதற்காக 500.. யூரோ பெற்றுத்தந்தமைக்கு நன்றி தெரிவிப்பதுடன் தென்னம்பிள்ளை செய்கைக்காக இப் பணத்தினை பெற்றுத்தந்தமை மிகவும் மகிழ்ச்சி கரமான விடயமாக உள்ளது. இப் பணத்தை வழங்கிய MR, Johannes Grudler அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத்தெரிவிப்பதுடன், என்றும் தங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.சிவராசா,                                                            15-06-2020

பிரதம ஆசிரியர் அவர்களுக்கு,

""மண்"" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை-ஜெர்மனி.

கொடையளிப்புத் தொடர்பான அறிவித்தல்.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது

பொருள்: பயன்கருதாதவர் செய்தஉதவின் நன்மையினை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலையும்விட அளவினால் மிகப் பெரியதாகும்.

எனும் வள்ளுவன் வாக்கிற்கமைய வடபுலம் தாண்டி மலையகம் நோக்கிய ஐரோப்பாவின் நிவாரணம்! இணைத்தது மொழி வாழ்க தமிழ்!

இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்தில் எமது மலையக தமிழ் மக்கள் 58 தோட்டங்களில் 232 பிரிவுகளில் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய இம்மக்களுக்கு, நாட்டில் ஏட்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் ஐரோப்பா கிளையினால் 190 குடும்பங்களுக்கும், நோர்வே தமிழ் சங்கத்தினால் 580குடும்பங்களுக்கும், ஜெர்மனி மண்சஞ்சிகைனால் 203 குடும்பங்களுக்கும், நிவாரணப்பொருட்கள்வழங்கப்பட்டன.

எவ்விதமான பிரதி உபகரணமும் எதிர்பாராமல் இவர்கள் செய்த உதவி கடலினும் பெரிதாகும். 5,13,166.52 ரூபா பெறுமதியான இந்த நிவாரணப் பணியானது உண்மையில் பசியோடு வழிப்பார்த்திருந்த பலர் பசியாற்றிருக்கின்றது என்பதில் எச்சந்தேகமுமில்லை.

உதவிக்கரம் நீட்டிய எமது ஐரோப்பா வாழ் எம் உறவுகளை ஒரு போதும் மறவோம்.

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது" நன்றிகள்

இவண்

G.Sivarajvalavan B.A(publi.Admi)
President
Tamil Cultural Research Forum
#10,Pattiyovita road, Ratnapura,Sri Lanka.
tamilcultural.lk@gmail.com
ganeshansivaraj@gmail.com
+94 77 398 43 43 +94 76 61 61 522 (WhatsApp)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
# Hindu Anpakam Children Development Center

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
கழரதளஅளாமயய நலளரள டி.்தமய நஅள நனசÊன டசரஜ
Parentless Children Pity Rescue, Protect Them.

பதிவு இல: NP/30/23/04/02
NEP/DS/V/SS/111
Reg No : HA/04/V/24

E – mail hinduanpakam@gmail.com | 2ம் கட்டை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. | தொ.இல : 0094 024-2223683 T.P. : 0094 0776143628 | 2nd Mile Post, Mannar Rd, Veppankulam, Vavuniya.

President
Miss.K.Jeyarany

Vice Presidents
Mr.K.Kirupagaran
Mrs.S.Rajini

Secretary
Mrs.S.Niranjana

Treasurer
Mr.M.Kathirkamarajah

Asst Secretary
Mr.G.Sriskantharajah

Asst Treasurer
Mrs.T.Rathimalar

Board of Members
Mr.S.Sabanathan
Mr.M.S.Selvarajah
Mr.T.KuruKulasingam
Mr.K.Uthayakumar
Mr.S.Santhirakumar
Mr.K.Kanesarajah
Mr.E.Tharmapalan
Mr.M.Jegan
Mr.S.Raveendran
Mrs.K.Santhiraleela
Mrs.J.Thadsayini
Mrs.S.Nirmala

Patron
Mr.V.S.Thevarajah
Mr.Dr.Ramachchandran
M.S.Subramaniyam

Bank / A/c / details
032020254291
Hatton National Bank
Vavuniya

Contact
024 222 3683
077 6143628

E.Mail
hinduanpakam@gmail.com

திரு.V.சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை,
ஜேர்மனி.
18.05.2020.

அன்புடையீர்,

நாம் அனைவரும் இறைவனின் ஆசியுடன் நலமுடனே உள்ளோம். தங்கள் நலத்திற்கு இறைவனை பிரார்த்திக்கின்றோம். தாங்கள் தொடர்ந்து எமது இல்லச்சிறார்களின் வளர்ச்சிக்காக உதவிபுரிந்து வருவதற்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் தாங்கள் எமது வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்த ரூபா 96.351.13 இனை 30.04.2020 அன்று பெற்றுக்கொண்டதுடன் மேலும் 14.03.2020 அன்று வைப்புச்செய்யப்பட்ட 93.484.13 ரூபா தங்கள் வங்கியால் மீளப்பெறப்பட்டு மீண்டும் 11.05.2020 அன்று ரூபா 85.028.83 வைப்புச்செய்யப்பட்டுள்ளது என்பதை தங்கள் தகவலுக்காக அறியத்தருவதுடன், தாங்கள் அனுப்பிய பணத்திற்கான பற்றுச்சீட்டுக்களை விரைவில் தபாலில் அனுப்பி வைக்கின்றோம்.

நன்றி,

இங்ஙனம்,

தலைவர்
இந்து அன்பகம் சிறுவர் இல்லம்,
வேப்பங்குளம்,
வவுனியா.

Parentless Children Pity rescue, Protect them

**HINDU ANPAGAM**

Veppankulam, Vavuniya - Sri Lanka

T.P : 024-2223683

திகதி 11/5/2020

திரு/திருமதி: சிவராஜா (பிரதம ஆசிரியர் மண் சஞ்சிகை, ஜேர்மனி)

விடயம்: இல்லச்சிறார்களின் பராமரிப்பு செலவிற்காக

நடை பெறும் திகதி

பணம் ரூபா: எண்பத்தையாயிரத்து இருபத்தெட்டு ரூபா எண்பத்து மூன்று சதம் மட்டும்.

நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

ரூபா: 85028.83

1503

இங்ஙனம்
பொறுப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சிறுவர் அமுதம்" அன்பின் சிவராஜா மாமாவுக்கு.....

இத்துடன் எங்கள் வலைப்பக்கத்தை பற்றி எழுதி உள்ளேன். மற்றவர்களுக்கு தெரிவிப்பதற்கு நன்றிகள்.

அன்புடையீர்,

எனது அப்பா உயிரோடு இருந்திருந்தால் அவருக்குக் கடந்த ஞாயிற்றுக்கிழமை 10.05.2020 அன்று 70 வயதாகி இருக்கும். துரதிஷ்டவசமாக அவர் 1994ம் ஆண்டு அவரது 43வயதிலேயே, அதாவது இன்டர்நெட் காலம் பூக்கும் முன்பே, இறந்து விட்டார். புதுமைகளையும், புது யுக்திகளையும் விரும்பிய அவர், இணையதளத்தையும் விரும்பி இருப்பார். அதனால், அவரது 70வது பிறந்தநாளில் அவர் நினைவாக, அவர் எழுதிய சிறுவர் அமுதம் சஞ்சிகைகளை நான் எங்கள் வலைப்பக்கத்தில் வெளியிட்டிருக்கிறேன். இப்போதுதான் தொடங்கி உள்ளேன். தற்போது ஆறு சஞ்சிகைகள் எங்கள் வலைப்பக்கத்தில் உள்ளன. இன்னு சில காலத்தில் எங்களிடம் இருக்கும் அனைத்து பதிப்புக்களையும் நீங்கள் எங்கள் வலைப்பக்கத்தில் காணலாம்.

இத்துடன் உங்களிடம் ஓர் உதவியையும் கோரிக் கொள்கிறேன். நினைவுகள் எனும் பகுதியில் உங்கள் நினைவுகளை எங்களோடு பகிர்ந்து கொண்டால் நான் மிகவும் மகிழ்ச்சி கொள்வேன். எந்த மொழி, எதைப் பற்றி, எவ்வளவு, எந்த வடிவம் (எழுத்து வடிவம், புகைப்படம், வீடியோ பதிவு) ஒன்றும் முக்கியம் இல்லை. நீங்கள் அனுப்பினாலே போதும்.

உங்களுக்கு எனது அப்பா சின்ன இராஜேஸ்வரன், சிறுவர் அமுதம், என் அம்மா (1994-1999 வரை சிறுவர் அமுதம் தலைமை ஆசிரியை) பற்றி நினைவுக்கு வரும் எதுவும் எழுதலாம். மற்றும் இன்னுமோர் கோரிக்கை: இந்த வலைப்பக்கத்தை தயவு செய்து உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு, அதிலும் முக்கியமாக அப்பாவையும், அம்மாவையும் அறிந்தவர்களுக்கும், பழைய சிறுவர் அமுதம் வாசகர்களுக்கும் தெரியப் படுத்துங்கள். என்னிடம் எல்லோரின் தொடர்பும் இல்லை. உங்கள் ஆக்கங்களை எனது மின்னஞ்சல் முகவரிக்கு (Pingkalair@aol.com) அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வலைப்பக்கத்தை பார்க்க: https://siruvar-amutham.blogspot.com/

Facebook FO: https://www.facebook.com/Siruvar-Amutham-113831843635868 என்றும் அன்புடன்...பிங்கலை (மகள்)

(1990-1994 ஆண்டு காலப்பகுதியில் யேர்மனியில் வெளிவந்த "சிறுவர் அமுதம்" சஞ்சிகை ஆசிரியரின் மகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்..

(1) உலகின் பணக்கார விளையாட்டுவீரர் என்ற பட்டியலில் தற்போது முதலிடத்தில் இருப்பவர் இங்கிலாந்தின் கார் ஒட்ட வீரரான லெவிஸ் ஹெமில்டன்.(Lewis Hamilton) இவர் 6 தடவைகள் ஃபார்முலா-1 (Formula-1) உலகக்கிண்ணத்தை வென்றவராவர். இவரின் சொத்து மதிப்பு 224 மில்லியன் பவுண்டுகளாகும்.

(2) அமெரிக்க கூடைப்பந்தாட்ட நட்சத்திரமான மைக்கல் ஜோர்டான் (Michael Jordan) 1985ம் ஆண்டு விளையாடிய போட்டியில் அணிந்து விளையாடிய சப்பாத்து தற்போது ஏலவிற்பனையில் 12கோடி அமெரிக்க டொலருக்கு விலைபோயுள்ளது. கொரோனா அவசரகால நிதிக்காக நடைபெற்ற ஏலவிற்பனையிலேயே இது விற்பனையாகியிருக்கின்றது.

## சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள்...

நான்கு வருடங்களுக்கு ஒருதடவை இடம்பெறும் சர்வதேச நாடுகள் கலந்துகொள்ளும் ஒலிம்பிக்போட்டிகள் ஏற்கனவே திட்டமிட்டதன்படி இவ்வருடம் 24.7.2020 - 9.8.2020 வரை யப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற இருந்தன. 2019 டிசம்பர் மாதம் சீனாவில் ஏற்பட்ட கோரோனா தொற்றுநோய் ஆறுமாதங்கள் தாண்டியும் மிகப்பெரும் மனித அழிவுகளை ஏற்படுத்தியது. இன்னும் முடியாத நோயாக இது உலகம் எல்லாம் பரவிக்கொண்டிருக்கிறது.
இதன் காரணமாக இப்போட்டிகளை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கோடிக்கணக்கான பணம் நட்டம் ஏற்பட்டிருப்பதாக யப்பான் நாடும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியும் தெரிவித்ததுடன் இப்போட்டிகளை அடுத்தவருடம் (2021) கோடை காலத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. இதனால் உலக விளையாட்டு ரசிகர்கள் பெரும் மனவேதனையை அடைந்திருப்பதுடன் வீரர்களும் உற்சாகமிழந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. இறுதியாக நடைபெற்ற போட்டிகளின் பார்வையாளர்களைப் பார்ப்போம்..

2016 Rio Olympic -3.6 பில்.மக்கள் 2012 London Olympic-3.6 பில். மக்கள்
2008 Beijing Olympic-4.4 பில்.மக்கள் 2004 Athens - 3.9 பில். மக்கள்

இந்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற காலம், நாடு, இடம், பங்குபற்றிய வீரர்களின் எண்ணிக்கைகளையும் இங்கே காணலாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | நடைபெற்ற நாடு | நடைபெற்ற இடம் | போட்டிகள் | பங்குகொண்ட வீரர்கள் தொகை |
|---|---|---|---|---|
| -1896 | GRACELAND | ATHENS | 14 | 241 |
| -1900 | FRANCE | PARIS | 24 | 997 |
| -1904 | USA | ST.LOUIS | 12 | 651 |
| -1908 | GREAT BRITAIN | LONDON | 22 | 2008 |
| -1912 | SWEDEN | STOCKHOLM | 28 | 2407 |
| -1916 | GERMANY | GERMANY | 1 ம்உலகப்போர் | நடைபெறவில்லை |
| -1920 | BELGIUM | ANTWEPEN | 29 | 2626 |
| -1924 | FRANCE | PARIS | 44 | 3089 |
| -1928 | NETHERLAND | AMSTERLAND | 46 | 2883 |
| -1932 | USA | LOS ANGELES | 37 | 1332 |
| -1936 | GERMANY | BERLIN | 49 | 3963 |
| -1940 | JAPAN | TOKYO | 2ம் உலகப்போர் | நடைபெறவில்லை |
| -1944 | GREAT BRITAIN | LONDON | 2ம் உலகப்போர் | நடைபெறவில்லை |
| -1948 | GREAT BRITAIN | LONDON | 59 | 4104 |
| -1952 | FINLAND | HELSINKI | 69 | 4955 |
| -1956 | AUSTRALIA | MELBOURNE | 72 | 3314 |
| -1960 | ITALY | ROME | 83 | 5338 |
| -1964 | JAPAN | TOKYO | 93 | 5151 |
| -1968 | MEXICO | MEXICO CITY | 112 | 5516 |
| -1972 | GERMANY | MUNICH | 121 | 7134 |
| -1976 | CANADA | MONTREAL | 92 | 6084 |
| -1980 | RUSSIA | MOSCOW | 80 | 5179 |
| -1984 | USA | LOSAAGELES | 140 | 6829 |
| -1988 | SOUTH KOREA | SEOUL | 459 | 8391 |
| -1992 | SPAIN | BARCELONE | 169 | 9356 |
| -1996 | USA | ATLANTA | 197 | 10318 |
| -2000 | AUSTRALIA | SYDNEY | 199 | 10651 |
| -2004 | GRACELAND | ATHENS | 201 | 10265 |
| -2008 | CHINA | BEIJING | 204 | 10708 |
| -2012 | GREAT BRITAIN | LONDON | 204 | 10490 |
| -2016 | BRAZIL | RIO | 205 | 11238 |
| -2020.2021 | JAPAN | TOKYO | | |
| -2024 | FRANCE | PARIS | | |
| -2028 | USA | LOS ANGELES | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500-00 யூரோ அன்பளிப்பு (Johannas Gruendler)

யேர்மனியில் எனது மகனுடன் பல்கலைக்கழகத்தில் கல்வியின்ற மாணவனான திரு ஜோகன்னாஸ் குறுன்ட்லர் (Johannas Gruendler) அவர்கள் 500-00 யூரோக்களை அள்ளி வழங்கியிருக்கிறார். தாயகம் துணுக்காய்-மல்லாவியில் இயங்கும் மாற்றுத்திறனாளிகளின் "ஒளிரும் இல்லத்தின்" பயனாளிகளின் பயன்பாட்டுக்காக இந்த நிதி உதவியை வழங்கியிருக்கிறார். இப்பணம் அந்த இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு. அங்கிருந்து வந்த கடிதமும் மறுபக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.



## 480-00 யூரோ அன்பளிப்பு

திரு ஜோகன்னாஸ் அவர்கள் எமது சஞ்சிகையின் செயற்பாடுகளை நன்கு அறிந்து 2018ம் ஆண்டு தொடக்கம் வவுனியாவிலுள்ள "அன்பகம்" சிறுவர் இல்லத்தில் வசிக்கும் ஆதரவற்ற பிள்ளைக்கு உதவி வருகின்றார். அதாவது வருடாவரும் (மாதம்-40 யூரோ) 480-00 யூரோக்களை எமக்கு அனுப்பி வைக்க, நாம் வருடமுடிவில் 480-00 யூரோக்களையும் வவுனியாவிற்கு அனுப்பி வருகிறோம். இந்த மனிதநேய உதவியை இவர் கடந்த இரண்டு வருடங்களாகச் செய்து வருகின்றார்.

இந்த மனிதநேயம் மிக்க கொடையாளியை எப்படி வாழ்த்துவது. நம்மினத்தின்மீது அன்பு, நேயம் கொண்டு இப்படிப்பட்ட உதவிகளை வழங்கிவருவது பாராட்டத்தக்க விடையமாகும். வாசகர் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.எனவே புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் இளம் தமிழ்ச் சமூகம் இப்படிப்பட்ட மனிதநேய உதவிகளைச் செய்ய முன்வருமாறு அன்போடு அழைப்பு விடுகின்றோம்!....

-ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















**மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியினால் கொரோனா வைரஸ் நிவாரணப் பணிகளுக்காக மலையகம் நுவரெலியா மாவட்டத்தில் 2020 ஏப்ரல் - மே மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட மனிதநேய உதவிகள**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 202








உலகமெல்லாம் கோரோனா நுண்ணுயிர் பேரழிவு 2019 - 2020


வருட சந்தா ஜேர்மனி 20€
ஏனைய நாடுகள் 25€


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org